Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

KANNOTTAM

வெளியீடு-29 | 20 பெப்ரவரி 2006 | விலை:- 07.00

காட்டுமிராண்டி
நிலையிலிருந்து
நாகரீகத்துக்கு,
பின் தங்கியதிலிருந்து
முன்னேறியதை
நோக்கி,
செயற்படுவதே
மனிதகுலத்தின்
உன்னத
இயக்கமாகும்.

# இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வும் வடக்கு கிழக்கில் மனித உரிமை, ஜனநாயகமும்

## மனிதர்கள் சுதந்திரமாகவும் சமாதானமாகவும் சமத்துவமாகவும் வாழ்வதே மனித குல அபிலாசை-அதிகார அகங்காரம் அதன் நேரிடை எதிரி.

இனமுரண்பாட்டு யுத்தம் ஆரம்பித்து பின்னர் புலிகளின் ஏக அகங்கார அதிகாரத்தை நிலை நாட்டுவதற்கான யுத்தமாக மாறி கால்நூற்றாண்டுகாலம உருண்டோடி விட்டது.

தற்போது மக்களின் அபிலாசைகளுக்கு விரோதமாக படுகொலையும் வன்முறையும் தலைவிரித்தாடும் நாடாக இலங்கை மாறிவிட்டிருக்கிறது.

2002 இல் ஐ.தே.க அரசாங்கமும் புலிகளும் மேற்கொண்ட யுத்தநிறுத்த ஒப்பந்த நாளில் இருந்து இற்றைவரை புலிகள் 3500 இற்கு மேற்பட்ட தடவை யுத்தநிறுத்த மீறலில் ஈடுபட்டதாகவும் படையினர் தரப்பில் 150 வரையிலான சம்பவங்களே பதியப்பட்டதாகவும் அண்மைக்கால இலங்கையின் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. இத்தகவல் பின்னர் பல்வேறு மனித உரிமை அமைப்புக்களின் அறிக்கைகளிலும் இடம்பெற்றிருந்தன.

படுகொலைகள் விலாவாரியாக உள்ளூர், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களாலும் பல்வேறு மாற்று



அரசியல் கட்சிகளாலும் பதிவுசெய்யப்பட்டதோடு பல்வேறு உள்ளூர் சர்வதேச இணையத்தளங்களிலும் இடம் பெற்றன. உலகளாவிய கண்டனக் குரல்கள் எழுந்தன. ஆனால் புலிகள் எப்போதும் இந்த படுகொலைகளை, ஆட்கடத்தலை நிறுத்தியதாகச் சரித்திரம் இல்லை.

சிறுவர் சிறுமியிரை தமது படைத் தேவைகளுக்கு அணிதிரட்டுவது பற்றி நாளும்பொழுதும் ஐ.நாவின் யுனிசெப் போன்ற அமைப்புக்கள் பதிவு செய்கின்றன. தற்போது மீண்டும் சிறுவர் சிறுமியிரை பிடித்துசெல்வது அதிகரித்திருக்கிறது. பல்கலைக்கழகங்களை மூடச்சொல்லி அல்லது பாடசாலைகளை ஸ்தம்பிதமடையச் செய்யச் சொல்லி புலிகள் பயமுறுத்துவதால் பெற்றோர் பெரும் பீதி கொண்டுள்ளனர்.

வன்னியை தாண்டி புலிகளின் மாவீரர் போராளிகள் குடும்பங்கள் கூட கொழும்பிற்கு எஸ்கேப் என்பதே உண்மையான நிலை. புலிகளின் கபடத்தனமான வஞ்சகத்தனமான மக்கள் போராட்டத்தையிட்டு அவர்கள் பெரும் விசனம் கொண்டுள்ளனர். சனநெரிசலான பஸ்நிலையத்திலும், ஆஸ்பத்திரியடியிலும், கோயில், தேவாலயங்களுக்கு அருகிலும் பாலன்பிறந்த கிறிஸ்துமஸ் தின கொண்டாட்டங்களுக்காக சனங்கள் சந்தடியாக பொருளகள் வாங்கும்போது ஆமிக்கு கிறனைட அடி, நேவிக்கு கிளைமோர் அடி என புலிகள் திட்டமிட்டு கச்சிதமாக மக்களை இறுதி இலக்காக வைத்து தாக்குதல்களை நடத்தினார்கள். போதாக்குறைக்கு தாம் இந்த தாக்குதல் சம்பவங்களில் சம்பந்தம் இல்லை, பொது மக்களே இத்தாக்குதல்களை மேற்கொண்டதாக, மேற்கொள்வதாக கதை கட்டி விட்டார்கள். தமது துண்டுபிரசுரங்களை பொதுமக்களின் பெயரில் அடித்து விட்டார்கள். தமது ஆங்கில, தமிழ் இலத்திரனியல் அச்சு ஊடகங்கள் முழுவதிலும் பொதுமக்கள் மீது பழி சுமத்தினார்கள். இங்கு பொதுமக்கள் மீது நேரடியாகவோ மறைமுகமாகவோ தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என்பதே புலிகளின் அபிலாசை இலக்காக அமைந்திருந்தது.

நடத்தப்பட்டத் தாக்குதல்கள் அனைத்தும் பொதுமக்களால் நிகழ்த்தப்பட்டது என்று புலிகள் விடும் கரடி மாத்திரமல்ல எத்தனையோ சம்பவங்கள் புலிகளின் நம்பகரத் தன்மை தொடர்பாக கேள்வி எழுப்புவனவாக அமைகின்றன.

புலிகள் துணைப்படைகள் தான் மக்களின் சுமூகமான இயல்பு வாழ்க்கைக்கு தடையாக இருக்கின்றன என்று இடையறாது மாற்று தமிழ் அமைப்புக்களை இலக்குவைத்து பல்வேறு தளங்களிலும் தாககுதல்களை நடத்தி வருகிறார்கள். என்றோ ஒரு நாள் மக்கள் தம்மைத் தூக்கி எறிவார்கள் என்பது புலிகளுக்கு நன்கு தெரியும்.

தொடர்ச்சி 02ம் பக்கம்

# உள்ளூராட்சித் தேர்தல்

தூரதிஷ்டம் என்னவென்றால் எமது ஜனங்களுக்கு உள்ளூராட்சித் தேர்தலிலும் வாக்களிக்கக்கூடிய வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. உள்ளூராட்சி சபைகள் என்பன மக்களின் நாளாந்த செயற்பாடுகள் வாழ்க்கையுடன் தொடர்புள்ள ஜீவாதார சபைகள் பொது சுகாதாரம் கிராம உள்வீதிகள் பராமரிப்பு, சனசமூக நிலையம் வாசிகசாலை இன்னோரன்ன விடயங்கள் இதன் கீழ் வருகின்றன.

ஆனால் வடக்கு கிழக்கில் மக்கள தமது பிரதிநிதிகளை தெரிவுசெய்யும் உரிமை நீண்டகாலமாகவே மறுக்கபட்டிருக்கிறது. உள்ளூராட்சி சபையின் வேட்பாளர்கள் மாத்திரமல்ல மக்களால் நேசிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் பலர் புலிகளால் கொல்லப்பட்டுள்ளனர். சரோஜனி யோகேஸ்வரன் யாழ்மாநகர முதல்வராக இருந்தவர் தமிழர் விடுதலைக் கூட்டணி, தம்பிராசா சுபத்திரன் றொபேர்ட் ஈ.பி.ஆர்.எல்.எப் யாழ்மாநகரசபை அங்கத்தவராக இருந்தவர். செழியன் பேரினபநாயகம் மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வராக இருந்தவர். பே. சூரியமூர்த்தி திருமலை நகர பிதாவாக இருந்தவர். இவர்கள் எல்லாம் புலிகளால் கொல்லபட்டமையிலிருந்தே மக்களின் அன்றாட வாழ்க்கை ஜீவாதார செயற்பாடுகளுக்கு புலிகள் எத்தகைய எதிரிகள் என்பது புரிந்திருக்கும்

ஈழப்போராட்டத்தின் ஆரம்பமே யாழ் மாநகரசபையில் சாதாரண மக்களின் செல்வாக்கு மிகுந்த அல்பிரட் துரையப்பாவைக் கொலைசெய்தே ஆரம்பமாகியது. அல்பிரட் துரையப்பா துரோகி என்ற கற்பிதத்திலிருந்தே தவறுகள் விஸ்வரூபம் எடுத்தன. சகலதுமே மீள்பரிசீலனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும். தமிழர், தமிழ் உணர்வின் பேரில் அணியப்பட்டிருக்கும் கவசங்கள் களையப்பட வேண்டும். புனிதப்படுத்தப்பட்ட பல விடயங்கள் கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டும். இங்கு நாம் உண்மையை கண்டறிய முயலாவிட்டால் சமூகத்தின் அழிவில நாமும் பங்காளிகளாவோம்.

தற்போது வீதிகளிலும் ஆஸ்பத்திரியிலும் கழிவுநீர் கால்வாய்களிலும் கண்ணி வெடி வைக்கப்பட்டு மக்களின அன்றாட வாழ்க்கை கேள்விக்குறியாக்கப்பட்ட நிலையில் ஜனநாயக இடைவெளியற்ற நிலையில் மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யவும் முடியாது. எனவே உளளூராட்சித் தேர்தல் தற்போதைக்கு வடக்கு கிழக்கில் நடத்த முடியாது என்பதே [illegible] நிலவரமாகும்.

# இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதான மூலமான சரியான தீர்வை வலியுறுத்தி லண்டனில் ஆர்ப்பாட்டம்!

அண்மையில் ஒருங்கிணைக்கப்பட்டிருந்த தமிழ் சமாதான சபை நீதியும சமாதானமும் நிலவும் நிரந்தர தீர்வைக் கோரி கடந்த பெப்ரவரி 19 ஞாயிறு மதியம் லண்டனில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நிகழ்த்தியுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி (லண்டன்), தமிழர் ஜனநாயக காங்கிரஸ், தமிழ் பெண்கள் அமைப்பு, முஸ்லிம் தகவல் மையம், இலங்கையில் ஜனநாயகத்துக்கும் நீதிக்குமான அமைப்பு, இலங்கை ஜனநாயக ஒன்றியம் மற்றும தமிழ் சமூக விஞ்ஞான கல்வி வட்டம் (லண்டன்) ஆகிய அமைப்புகள் இலங்கை இனப் பிரச்சினைக்கு சமாதான மூலமான தீர்வை வலியுறுத்தும், புலம் பெயர் தமிழ் மக்களின் கரங்களை வலுப்படுத்தும் முகமாகவே தமிழ் சமாதான சபையை உருவாக்கியிருந்தன.

கடும் குளிரிலும, மழையிலும் நூற்றுக்கும் அதிகமான மக்கள் பங்குபற்றியிருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், 'சமாதானத்திற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள்', 'இலங்கை அரசே இனப் பிரச்சினைக்கு தீர்வு தா', 'ஜனநாயகத்துடனான சமாதானமே எமக்குத் தேவை', 'சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளையும் பங்குபற்ற விடு', 'சிறுவர்களை படை [illegible]



போன்ற சுலோகங்கள் எழுப்பப்பட்டன. இவ் ஆர்ப்பாட்டத்தில் ஆங்கிலத்திலும தமிழிலும் உரையாற்றியிருந்த அனைவரும், இலங்கை மக்களை- குறிப்பாக வட-கிழக்கு மக்களை பாதித்துவரும் நண்ட காலமாகப் புரையோடியிருக்கும் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வை தருவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தியிருந்தனர். இது போன்ற ஆர்ப்பாட்டங்கள் பல இம்மாதம் அமெரிக்காவிலும், கனடாவிலும், ஜேர்மனியிலும், ஜெனிவாவிலும் நடாத்த ஏற்பாடாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசையும், தமிழீழ விடுதலைப்புலிகளையும், நிரந்தரமான அரசியல் தரவொன்றை அடைவதற்காக சமாதானப் பேச்சுவார்த்தையை பயன்படுத்துமாறும், இன்னொரு இனப் போருக்கான தயாரிப்புகளுக்கு பேச்சுவார்த்தை மேசையை பயன்படுத்த வேண்டாமெனவும் தமிழ் சமாதான சபை வலியுறுத்துகின்றது. சகல மக்களதும் அடிப்படை மனித உரிமைகள் சமாதானப் பேச்சுவாரத்தையின் மையமாக வேண்டுமெனவும், இலங்கை இனப் பிரச்சினைக்கு சமஸ்டி அடிப்படைக்கு அமைவான தீர்வொன்று ஆராயப்படவேண்டுமெனவும் கருதும் தமிழ் சமாதான சபை, இடைக்காலத் தீர்வுகள எதுவும் உகந்தவையல்ல எனவும் கருதுகிறது.

தொடர்ச்சி 06ம் பக்கம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்



## கனவு மெய்ப்பட வேண்டும்

கால் நூற்றாண்டு கால யுத்தமும், வன்முறைகளும் எமது மக்களின் வாழ்வை சிதைவடையச் செய்துள்ளன. எமது மக்களின் அபிலாஷைகள் இன்னும் கானல் நீராகவே இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் முடிவிலா துன்ப பயணத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். மரணத்தையும் வாழ்வையும் பிரித்தறிய முடியாத அவலநிலை ஒன்று எம்மைச் சூழ்ந்துள்ளது.

இந்த அவலம் முழு இலங்கையின் முன்னேற்றத்திற்குப் பதிலாக சீரழிவுப் பாதையில் இட்டு சென்றுள்ளது. இலங்கையின் அரசியல் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு மனப்படுத்தலே இன்று அவசரமானதும், அவசியமானதுமாகும். வன்மங்கள், குரோதங்கள், பகைக்கொண்ட உள்ளங்கள் இங்கு பிரச்சினையாக இருக்கின்றன.

இலங்கை சமூகங்கள் இந்த 21ம் நூற்றாண்டில் மேலும் நாகரிகமயப்படுத்த வேண்டியவைகளாக இருக்கின்றன. இங்கு வாழும் மூன்று இனங்களும், நான்கு மதங்களும் எவ்வாறு சுதந்திரமாக சேர்ந்து வாழ்வதென்பதே இங்கு முக்கியமானதாகும். எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்களின் சமூக, பொருளாதார அரசியல் உரிமைகளை பாதுகாப்பதிலேயே இலங்கையின் அனைத்து மக்களின் சுபிட்சமான வாழ்வும் தங்கி நிற்கிறது.

எல்லோரும் இன்புற்றிருக்கவே இவ் உலகு. ஏன் இந்த சிறிய தீவில் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களும் இஸ்லாமிய, கிறிஸ்த்தவ, பௌத்த, இந்து மக்களும் இணைந்து வாழ முடியாது. தீராப் பகை இந்த நாட்டைச் சீரழித்து வருகிறது என்பதை உணர மறுக்கிறார்கள். ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் என்பார்கள். நாம் மனிதர்கள் ஒருவரை ஒருவர் சகித்து நட்புறவுடன் மற்றவர்களின் ஜனநாயக உரிமைகளை மதித்து வாழ கற்றுக்கொள்ள வேண்டும்.

மனிதர்களின் விடுதலையின் பேரிலேயே இங்கு கொலைகள் அரங்கேற்றப்படுகின்றன. உண்மையில் மனிதர்களின் விடுதலையின் பேரில் அவர்களின் வாழ்வு துவம்சம் செய்யப்படுகிறது.

மனிதர் என்ற ரீதியில் அவனுக்கு அல்லது அவளுக்கு இருக்கக்கூடிய சின்ன சின்ன உணர்வுகள் ஆசைகள் இங்கு சாகடிக்கப்படுகின்றன. இலங்கை தென்னாசியாவில் கல்வி விகிதாசாரம் கூடிய நாடு என்கிறோம். அந்த கல்வி அறிவுக்கும் நாம் அனுபவிக்கும் வாழ்வுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது.

விடிந்தால் கொலை, பிஸ்டல், கிரனேட், துப்பாக்கிச்சூடு, கண்ணிவெடி, அகதி, படுகாயம், வெறிச்சோடிய வீதிகள், என்று எத்தனை நாளைக்கு இந்த வாழ்வு.

சில தசாப்தங்களேயான மனித வாழ்வின் காலம் இங்கு விரயமாகிறது.

உள்ளத்தில் ஒளி உண்டானால் வாக்கினில் ஒளி உண்டாம். இலங்கையின் இருண்ட மனங்கள் சமூக வாழ்வில் ஒளியை வெறுக்கின்றன.

போதும் போதும் என்றளவிற்கு துன்பத்தை அனுபவித்த எம் மக்கள் தம் சொந்த பிரதேசங்களில் கௌரவமாக சுயமரியாதையுடன் தத்தமது அபிப்பிராயங்கள், அபிலாஷைகளுடன் வாழும் நிலை தோன்றாதா என்ற அங்கலாய்ப்புடன் ஏக்கத்துடன் காலத்தைக் கழிக்கிறார்கள்.

எமது அண்டைநாடு இந்தியா சர்வதேச சமூகம் இலங்கையில் இரத்தம் சிந்துதலையிட்டு நியாயமான கவலை கொண்டுள்ளன. இந்த நாடு நிம்மதி பெருமூச்சு விடவேண்டும் என்பதில் உலகிற்கு அக்கறை உண்டு.

ஆனால் சமூகத்தை பீதியில் உறையவைத்து பழக்கப்பட்டவர்கள் தொடர்ந்தும் அந்த வழியிலேயே சமூகத்தை வைத்திருக்க விரும்புகிறார்கள்.

ஒவ்வொரு முறையும் யுத்த நிறுத்தமொன்று ஏற்பட்டால் இலங்கையின் சகல சமூகங்களுமே ஒருகணம் பூரித்து போகின்றன. பெரும் துன்பம் சூழும் போதும் ஒரேவிதமான உணர்வை காட்டியிருக்கிறார்கள். சுனாமி வந்தபோது இலங்கையர் எல்லோரும் பேதங்களை களைந்து கரம் கோர்த்தார்கள்.

எனவே இயற்கையினாலும் சரி மனிதனாலும் சரி உருவாக்கப்பட்ட துன்பங்களில் இருந்து விடுபடுவதற்கு நாம் தயாராக வேண்டும்.

எமது வருங்கால சந்ததி - இன்றைய தளைமுறையினருக்கு ஒரு உருப்படியான நல்வாழ்வு கிட்ட வேண்டும். அதற்கு முதல் நிபந்தனை படுகொலை காட்டுமிராண்டி கலாச்சாரம் முடிவுக்கு வர வேண்டும். அது முதல் அடிவைப்பாக அமையலாம்

# ஜெனீவா பேச்சுவார்த்தையில் பங்குபற்றுவோருக்கு வழிகாட்டுவதற்காகவும், போர் நிறுத்த உடன்படிக்கை இந் நாட்டுக்கும், சம்பந்தப்பட்ட மக்களுக்கும் இன்றியமையாததொன்றல்ல என்பதை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் காட்டுவதற்காகவுமே இந்த அறிக்கை:-

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினாலும், ஒப்பந்த மீறல்களினாலும் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களும், இஸ்லாமிய மக்களுமே. விடுதலைப் புலிகள் தாம் பிடித்து வைத்துள்ள பகுதியில் தம்மை ஸ்திரப்படுத்த உதவியதோடு படிப்படியாக அரச கட்டுப்பாட்டு பிரதேசத்தையும் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உதவியது. இந்த நான்கு வருட யுத்தநிறுத்தம் அவர்களுக்கு இதை செய்வதற்கு பல சந்தர்ப்பங்களை அளித்ததோடு அரசாங்கம் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் பிடியை நழுவ விடவும் உதவியது.

விடுதலைப் புலிகளின் பினாமிகளாகிய தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் படுமோசடி மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் எனத் தெரிந்திருந்தும் நீண்ட காலமாக பாராளுமன்றத்தில் நியாயமான முறையில் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிப் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிக்காமை வருத்தத்துக்குரியதே. எம்மில் சிலர் எவ்வாறு பாராளுமன்றம செல்ல முடியவில்லை எனபதை ஐரோப்பிய யூனியன், பொதுநலவாய நாடுகள் உட்பட ஐந்து தேர்தல் கண்காணிப்புப் குழுக்களின் அறிக்கை மூலம் அறியலாம்.

மோசடி மூலம தெரிவு செய்யப்பட்ட 22 உறுப்பினர்களை உள்ளடக்கிய பாராளுமன்றம் முறைப்படி உருவாக்கப்பட்டதென்று கருத முடியாது. 13 ஆண்டுகளுக்கு மேல் என்னால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட கிளிநொச்சி தொகுதி 13 ஆண்டுகளுக்கு மேலாக நான் மேற்கொண்ட முயற்சியால் கிளிநொச்சி தனி மாவட்டமாக்கப்பட்டது. அத்தொகுதியை ஒருவரேனும் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. நான் கூடி பழகிய தமிழ், இஸ்லாமிய மக்களை சர்வாதிகார ஆட்சியை உருவாக்கி மக்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கோஷ்டியை "தமிழ் மக்களின் ஏகபிரதிநிதியாக" அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது போல் தோன்றுகிறது.

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ், இஸ்லாமிய மக்கள் சார்பில் பேசவும் அவர்களுக்காக உழைக்கவும் வேண்டிய தார்மீக கடமை என்மீது சுமத்தப்பட்டுள்ளது. ஆகவே முதல் கட்ட நடவடிக்கையாக விடுதலைப் புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட வேண்டும் அன்றேல் என்னால் முன் வைக்கப்படும் ஆலோசனைகளை உள்ளடக்கி மூன்று தொடக்கம் ஆறுமாதகால வரையிலான காலக்கெடுவுடன் ஒப்பந்தம் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

1. விடுதலைப் புலிகள் அரசுக்கும் மக்களுக்கும் பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் பல்லாயிரக் கணக்கான யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்டுள்ளமையால் அவர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்ட நேரத்தில் இருந்த இடத்திற்கு அவர்களின் போராளிகள் வாபஸ் பெற்று செல்ல வேண்டும்.

2. போர்நிறுத்த ஒப்பந்தம் சரத்து 1:13 படி வடக்கு கிழக்கில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் விடுதலை புலிகள் நடமாட அனுமதித்ததே அன்றி நாடுதழுவிய அனுமதியின்மையால் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இருந்து விடுதலைப் புலிகள் வாபஸ் பெறப்பட வேண்டும்.

3. போர் நிறுத்த ஒப்பந்தம் சரத்து 1:13 ஐ கைவிட முடியாதெனின் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட அதே சலுகையை இராணுவம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கும் செல்ல விடுதலைப் புலிகள் அனுமதியளிக்கப்பட வேண்டும்.

4. விடுதலைப் புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரசியல் நடவடிக்கைகள் தவிர ஆர்ப்பாட்டங்கள், ஹர்த்தால்கள் போன்றவைகளில் ஈடுபடுவதில்லை என உறுதியளிக்க வேண்டும்.

5. அரச நிர்வாகத்தில் தலையிடுவதில்லை எனவும், அரச ஊழியர்களை பேச்சுவார்த்தைக்கு அழைப்பது, உத்தரவிடுவது போன்றவையை தவிர்க்கவும் விடுதலைப் புலிகள் உறுதியளிக்க வேண்டும்.

6. பாடசாலை மாணவர்களை பாடசாலை நேரங்களில் பலாத்காரமாக எந்த நிகழ்ச்சிகளிலும் ஈடுபடுத்துவதில்லை என விடுதலைப் புலிகள் உறுதியளிக்க வேண்டும்.

7. ஒப்பந்தம் சரத்து 2:10 இன்படி ஏ9 வீதியில் பிரயாணிகள், வாகனங்கள், பொருட்கள் ஆகியவற்றுக்கு வரி விதிக்கும் அதிகாரம் புலிகளுக்கு வழங்கப்படாதமையினால் அத்தகைய அறவீடுகளை உடனடியாக நிறுத்துவதாக விடுதலைப் புலிகள் உத்தரவாதமளிக்க வேண்டும்.

8. கொலை, ஆட்கடத்தல், சித்திரவதை, சிறுவர்களை யுத்தத் தேவைகளுக்காக சேர்த்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவதில்லை என விடுதலைப் புலிகள் உறுதியளிக்க வேண்டும்.

9. பல்கலைகழக வளாகங்கள் திறக்கப்பட்டு செயல்படுவதை தடுப்பதில்லை எனவிடுதலைப் புலிகள் உறுதியளிக்க வேண்டும்.

10. எத்தகைய வன்செயல்களிலும் மக்களுக்கு எதிராகவோ, இராணுவத்துக்கு எதிராகவோ ஈடுபடுவதில்லை என்பதற்கு விடுதலைப் புலிகள் பொது உத்தரவாதமளிக்க வேண்டும்.

**வீ. ஆனந்தசங்கரி**
**தலைவர்**
**தமிழர் விடுதலைக் கூட்டணி**

## இனப்பிரச்சனைக்கு நிரந்தரத..................

01ம் பக்கத் தொடர்ச்சி

எனவே மாற்று தமிழ் அமைப்புக்களை வேரறுப்பது அவர்களின் பாசிச இருப்பிற்கு ஆதாரமான ஒன்று வெட்கம்கெட்ட தனமாக சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் ஜெனிவாவில் இதனைத்தான் அவர்கள் கோரவிருக்கிறார்கள்.

சர்வதேச சமூகமும் அரசும் இதனை விளங்கிக் கொள்ளவேண்டும். வடக்கு கிழக்கில் ஜனநாயகம், மனித உரிமை என்பவற்றை மிச்ச மீதி இன்றி அழித்தொழிக்கும் புலிகளின் நிகழ்ச்சி நிரலுக்குள் விழுந்துவிடாமல் சர்வதேச சமூகமும், அரசும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் எச்சரிக்கையாக இருகக வேண்டும்.

நாகரிக உலகில் எங்கும் காணப்படாத ஒரு முறையைப் புலிகள் கோரி நிறகிறாகள். அதுவும் ஐநாவின் இணைத்தலைமையகம் அமைந்திருக்கும் ஜெனிவாவில் போய்நின்று இலங்கையின் வடக்கு கிழக்கில் ஜனநாயகம் இருக்கக் கூடாது. வேறு கட்சிகள் இருக்கக்கூடாது என்று கோருகிறார்கள். இது மிகவும் வெட்கக்கேடானதும் அவலமானதும் ஆகும்.

மாற்று கட்சிகளுக்கு வாய்ப்பூட்டு போட்டு வடக்கு கிழக்கை விட்டு அப்புறப்படுத்திவிட்டால் மக்களை தாம் நினைத்தபாட்டிற்கு ஆட்டிவைக்கலாம என புலிகள் கனவு காண்கின்றனர்.

இது உலகில் எங்கும் காணப்படாத நடைமுறையாகும். புலிகள் இழுத்த இழுப்புகளுக்கெல்லாம் சர்வதேச சமூகம் ஆடவெளிக்கிட்டால் அது இலங்கையின் சகல சமூகங்களுக்கும இழைக்கப்படும் மாபெரும் அநீதியாகவே இருக்கும் என்பதை தயவுடன் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இலங்கை அரசுக்கு இரண்டு பிரதான கடப்பாடுகள் உண்டு. ஒன்று இலங்கையில் 6 தசாப்தங்களுக்குமேல் நிலவும் இனப்பிரச்சினைக்கு தமிழர்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் விதமாக நிரந்தர தீர்வொன்றை முன்வைப்பது. இரண்டாவது முதலாவதாகச் சொன்னதன்படி பிரிக்கமுடியாத அங்கமான ஜனநாயகம் மனித உரிமைகளை வடக்கு கிழக்கில் உறுதி செய்வது.


## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.**
**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

E.P.I.C., Box No: 0362
71603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738
London - Wcix - 3nn,
U.k.

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 222 2022,

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 22 25179


No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 22 27118

141A, மன்னார் ரோட்
குருமன்காடு,
வவுனியா.
☎ 024 22 23102

சென்செபஸ்த்தியார் வீதி
மன்னார்.
☎ 023 22 32822


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பிராசா சுபத்திரன் (தோழர் றொபேட்) பிறந்த தினம்



24 - 12 - 1957

தோழர் றொபேட் சமகாலத்தில் தமிழ் மக்களின் தேசிய ஒருமைகளுக்காகவும், ஜனநாயகம், மனித உரிமைகளுக்காகவும், முன்னணியில் நின்று போராடியவர். தமிழ் சமூகத்தில் காட்டுமிராண்டி நிலைக்கு பரதியீடாக நாகரிகமான சமூகமொன்றை உருவாக்க தன்னை அர்ப்பணித்தவர்.

கால்நூற்றாண்டு காலம் தான் பிறந்து வளர்ந்த சமூகத்துக்காக தன்னை முழுதாக அர்ப்பணித்து உழைத்த மனிதனை படுகொலை செய்தவர்களை காட்டுமிராண்டிகள் எனறல்லாமல் வேறென்னென்று அழைப்பது. றொபேட் தோழரை போலவே பல நூற்றுக்கணக்கான ஜனநாயக மனித உரிமைவாதிகளும், அரசியல் தலைவர்களும் கல்விமான்களும் சாமான்ய மக்களும் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அவர் வன்முறையற்ற நாகரிகமான சமூக வாழ்வொன்றை கனவு கண்டார். ஈழ மாணவர் பொதுமன்றத்தில் அவர் 1980 களின் ஆரம்ப முற்பகுதியில் இணைந்து கொண்டவர். தமிழ் சமூகத்தினுள் இன்றும் தீராத வியாதியாக திகழும் சாதி ஒடுக்குமுறை, பெண் ஒடுக்குமுறை, சமூகச் சுரண்டல் உட்பட அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதில் தனது காத்திரமான பங்களிப்பை வழங்கியவர். அவர் இலங்கை அரசின் சிறையிலும் பெரும் துன்பங்களை அனுபவித்தவர். ஆனால் எதற்கும் அவர் மனம் கலங்கவில்லை. எமது சமூகத்தின் எதிர்கால சுபிட்சமான வாழ்வில் அவர் பெரிதும் நம்பிக்கைக் கொண்டிருந்தார்.

அவர் சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் துறைகளிலும் பரவலாக நண்பர்களை கொண்டிருந்தார். சாதாரண கிராமபுற வறிய மக்கள் ஊடகத்துறையினர், கல்விமான்களுடன் உணர்வுபூர்வமான உறவை கொண்டிருந்தார்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஒரு மக்கள் இயக்கமாக உருவாகுவதில் அவர் குறிப்பிடத்தகுந்த பங்களிப்பை வழங்கியுள்ளார். அவர் குளக்காட்டான் என்ற பெயரில் வெலிக்கடை சிறையில் குறிப்பிடத்தகுந்த பல கவிதைகளை எழுதினார். அங்கு அவர் வாழ்ந்த (1980 களின் நடுப்பகுதியில்) காலத்தில் சிங்கள சிறை கைதிகளால் மேற்கொள்ளப்பட்ட வன்முறை சம்பவமொன்றைத் தொடர்ந்து அவருடைய கவிதைகள் பேரினவாதிகளால் எரித்து சாம்பலாக்கப்பட்டன.

எமது சமூகத்தில் தினமும் வாய்மொழியான பல ஆழமான கருத்துக்கள கொண்ட கூற்றுக்கள் அவருக்கு அத்துப்படியாக இருந்தன. அவர் தான் இருக்கும் இடத்தை கலகலப்பாகவும், இங்கிதமாகவும் வைத்துக் கொள்வார். சுயகட்டுப்பாட்டுடன் கூடிய வாழ்க்கை முறையொன்றை அவர் கடைப்பிடித்தார். ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு உதாரண மனிதராக அவர் வாழ்ந்து காட்டியவர். அவரும் அவர் போன்ற தம் உயிரை அர்ப்பணித்த தோழர்களும் மக்களும் எம் வாழ்வின் ஆதர்சங்கள்.

தமிழ் சமூகததில் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதும் மனித உரிமையை உறுதிப்படுத்துவதும் பல்லினங்களின் நாடாக இலங்கையை மாற்றுவதற்காக பாடுபடுவதும் உலக மானிடத்தின் ஒரு பகுதியாக எம்மை நாமே உணர்வதற்கான நிலைமையினை ஏற்படுத்துவதும் றொபேட் தோழர் போன்றவர்களுக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்க முடியும்.

# அன்புடன் தோழர்களுக்கு!

தோழர்களே கடந்த கால் நூற்றாண்டு காலப்பகுதியில் சுமார் இரண்டாயிரம் வரையிலான எமது தோழர்கள் பலிகொள்ளப்பட்டிருக்கிறார்கள் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்திலும், ஜனநாயகத்துக்கான போராட்டத்திலும் இவ்வாறு தோழர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். சக அமைப்புக்களை சேர்ந்தவர்கள் கல்விமான்கள், பொது மக்கள் என இந்த இரு போராட்டங்களிலும் கொல்லப்பட்டவர்கள் வகை தொகையற்ற எண்ணிக்கையினர். தமிழ் மக்கள் மாத்திரமல்ல சாதாரண முஸ்லீம் மக்கள், சிங்கள மக்கள தமது இன்னுயிரை அநியாயமாக இழந்திருக்கிறார்கள்.

இலங்கை சமூகம் மிக மோசமாக பிளவுபட்டு நிற்கிறது. நாங்கள் அழகிய கனவுகளுடன் மனிதகுலத்தின் உயர்ந்த இலட்சியங்களுடன் அப்பளுக்கற்ற எண்ணங்களுடன் போராட புறப்பட்டோம். வர்க்கம், சாதி, பெண்ணொடுக்குமுறை, தேசிய ஒடுக்குமுறை என பரந்த விரிந்த எண்ணங்களுடன்தான் எமது செயற்பாடுகளை ஆரம்பித்தோம் சமூகத்தில் இவ்வாறு ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலை என்பதே எமது அபிலாஷையாக இருந்தது பரந்துபட்ட மக்களை அணிதிரட்டியே இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என நாம் எல்லோரும் திடசங்கற்பம் கொண்டிருந்தோம் மக்கள்தான் தீர்மானகரமான சக்தி, மக்கள்தான் எமது ஆசான்கள் என்று ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தோம்.

மலையகத்திலும் கிழக்கின் கரையோரங்களிலும் யாழ் குடாநாட்டில் செம்மண் பிரதேசத்து ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலும் ஏன் சிங்கள ஜனநாயக முற்போக்கு சக்திகளுடனும் இணைந்து செயற்பட முற்பட்டோம். தொடர்புகளை பலப்படுத்தினோம் பிரசுரங்கள், பத்திரிகைள், சுவரொட்டிகள், என்பன எமது பிரதான ஆயுதங்களாக இருந்தன.

1983க்கு பிந்திய சூழ்நிலையில் நாங்கள் ஆயுதங்களை ஏந்தினோம். தவறுகள் நேர்ந்தபோதும் அவற்றை திருத்திக் கொண்டு முன்னேற முயற்சித்தோம். எமது சமூகத்தில் நாம் கொண்ட உயரிய நிலைப்பாடுகளுக்காக அவற்றை முன்கொண்டு செல்வதற்காக போராட வேண்டியிருந்தது. எம்மையும் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. பாரிய தவறுகளை திருத்தி முன்செல்ல வேண்டியிருந்தது.

தனிநபர் வழிபாடு ஆயுதம் மோகம என்பன எம் மத்தியில் தலைதூக்காமல் இல்லை. அவற்றையெல்லாம் விஞ்சி எம்மை மனிதர்களாக நிலை நிறுத்தி நாம் போராட வேண்டியிருந்தது. நாம் சாதாரண மனிதர்களாக வாழ்ந்து கொண்டு போராட வேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தோம் ஆனால் தனிநபர் வழிபாடு ஆயுதங்கள் மேல் காதல் கொண்ட மனோநிலை எமது சமூகத்திலும் எமக்குள்ளும் இருக்காமல் இல்லை.

நாம் கற்றலுக்கு முக்கியத்துவம் அளித்தோம் மக்கள் மத்தியில் அனுபவங்களில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஈடுபாடு ஏதோவொரு அளவில் எமக்கு இருந்தது.

தோழர்களே சர்வதேச அளவில் விடுதலை ஒடுக்குமுறைக்கு எதிரான மக்களுடன் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுடன் இணைந்து செயற்பட்டோம்.

1980களின் நடுப்பகுதியில் இருந்து 90களின் முற்பகுதிவரை நிகழ்ந்த தவிர்க்க முடியாத உலக மாற்றங்களை நாங்களும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சோவியத்யூனியன், கிழக்கு ஐரோப்பா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களுடன் நாங்கள் புதிய தேடல்களுக்கு எம்மை தயார்படுத்த வேண்டியிருந்தது.

ஆனால் சமத்துவ சமுதாயத்தை கனவு கண்டவர்களின் அந்த ஞானிகளின் கனவுகள் யதார்த்த வாழ்வில் ஒரு தரிசனத்தை செய்ய முற்பட்ட அந்த கனவுகள் நிஜமாக்கப்பட வேண்டும். உலக வளங்கள் உலகின் கோடானகோடி மனிதர்களிடையே பகிரப்படுதல் வேண்டும் சகலவிதமான சமத்துவமின்மைகளும் அகற்றப்பட வேண்டும், என்பதே எம் இலட்சியமாகும். இந்த மாபெரும் மானிட கனவு எய்தப்படும் வரை மனிதகுலம் கலகம் புரிந்துக்கொண்டே இருக்கும்.

## தோழர்களே!

மாபெரும் மானிட அபிலாஷைகளுக்கும் குறுகிய அதிகார வெறிகொண்ட ஜனநாயகத்தை சிறிதளவேனும் மதிக்காத மனித உயிர்களை [illegible] கொள்வதை விடுதலைப் போராட்டம் என சித்தரிக்கும் பேர்வழிகளிடம் நாம் சமரசம் இல்லாமல் போராட வேண்டும் ஏக அதிகாரம் என்ற அகங்காரத்தை எந்த சுயமரியாதையுள்ள மனிதனும் ஏற்றுக்கொள்ள மாட்டான்.

ஈழப் போராட்டம் என்பது தமிழர்களை பூமிப்பந்தில் இருந்து பிரித்துக் கொண்டு போவதற்காக அல்ல. மற்றய சமூகங்களுடன் ஐக்கியமாக வாழ்வதற்கே என நாம புரிந்துகொண்ட போதும அதனை ஆரம்பத்தில் ஆழமாக புரிந்துகொள்ளவில்லை. சமகால அனுபவங்கள் நிறையவே எமக்கு அறிவு வெளிச்சத்தை கொடுத்திருக்கின்றன.

பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராக கிளர்ச்சியடைந்த நாம் அதைவிட மோசமானதாக தமிழ் சமூகத்தினுள்ளேயே அதிகாரவெறி கொண்ட குழுவொன்று அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டபோது நாம் அதிர்ச்சியும் மனக்கிலேசமும் அடைந்தோம். அது எமக்கு மிகப் பெரும் படிப்பினையாகவும் இருந்தது. நாம் எமது பார்வையை ஆழமாக்க வேண்டியிருந்தது. மாறாத இறுகிப்போன கருத்துக்களை கட்டிப் பிடித்துக்கொண்டு இருக்கவில்லை. அடைந்தால் மகாதேவி இல்லாவிட்டால் மரணதேவி என்று நாம் இருக்கவில்லை. அடிபபடை இலட்சியங்களில பிறழ்வுபடாமல் நாம் தொடர்ந்து செயல்பட்டோம்.

சகல நம்பிக்கைகளும் தவிடுபொடியாக்கப்படடு சமூகம் அதலபாதாளத்துக்குள் தள்ளப்படுதற்கான அறிகுறிகள் எமது சமூகத்தின் உள்ளேயே தோன்றின.

எமது மாபெரும் ஜனநாயக தேசம்- அண்டைநாடான இந்தியாவின் அனுசரணையுடன் நாம் ஒரு நியாயமான தீர்வை தமிழ் மக்களுக்கு உருவாக்குவதற்கு போராடினோம் ஆனால் அந்த தீர்வு உருவாகவிடாமல் தடுப்பதில் தமிழ் சிங்கள இனவாத சக்திகள் கரம் கோர்த்துக் கொண்டதை நீங்கள் அறிவீர்கள்.

ஏற்கனவே சகோதரப்படுகொலைகளின் மூலம் மக்கள் மத்தியில் நம்பிக்கைகள் சிதறடிக்கப்பட்டன. தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்பது அர்த்தம் இழந்தது. தமிழ் பாசிசம் எமது சமூகத்தின் சகல விழுமியங்கள் மீதும் தாக்குதல் தொடுத்தது. அது கவிஞனையும், கல்வியாளனையும், ஆசிரியரையும், பெண்களையும், குழந்தைகளையும், முதியவர்களையும சாதாரண மக்களையும் அழித்தொழித்தது. பேரினவாத அடக்குமுறையை விஞ்சியதாக இது உருவெடுத்தது.

எனவே ஜனநாயகத்துக்காக போராட வேண்டியதேவை எமக்கு எழுந்தது. நாம் புதிய வெளிச்சத்தில் பிரச்சினைகளை அணுக வேண்டியிருந்தது.

சமூகத்தினுள் படிப்படியாக ஜனநாயக இடைவெளி அற்றுப் போனது. எமது தோழர்கள் பூமிப்பந்தின் நாலா பக்கமும் சிதறிச் சென்றனர்.

## தோழர்களே!

ஒரு குறிப்பிட்ட பாராம்பரியத்தில் வந்தவர்கள் என்றவகையில் எம்மை நாமே இணைத்துக் கொண்டும் சமூகத்தில் ஜனநாயக மனித உரிமைக்காக போராடுபவர்களுடன் தோழமை பூண்டும் நாம் முன்செல்ல வேண்டும்.

நீங்கள் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து வாழ வேண்டும் கோஷ்டி மனோபாவம் அறவே தவிர்க்கப்பட வேண்டும். எம்முடன் வேறுபடுவதற்கான மற்றவர்களின் உரிமையை நாங்கள் கண்ணியமாக நோக்க வேண்டும். நாமே எல்லாம் எம்மளவுதான் வானம் என்ற முட்டாள்தனமான சிந்தனை எம்மீது தொற்றி விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் எமது சமூகத்தில் எல்லாம் நானே என்ற நிலை நிலவுகிறது. குறுகிய எண்ணங்களை நாங்கள் துரத்தியடிக்க வேண்டும்.

இலங்கையின் நாளாந்த கொலைகள் நிகழும் பிரதேசங்களில் இருந்து உலகளாவிய அளவில் பரந்துவாழும் தோழர்களே இதனை உங்கள் அடிமனதில் இருத்தியாக வேண்டும் உலக மானிடத்தின் ஒரு பகுதியினர் தான் என்ற எண்ணத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். அன்றாட வாழ்க்கைச் சூழல் உங்களை மூழ்கடித்து விட்டாலும் எமது சொந்தப் பிரதேசத்தில் நிகழும் கொடூரங்களை பற்றி நீங்கள் ஒருகணம சிந்தித்தேயாக வேண்டும்.

*தொடரும்*

# போர்நடவடிக்கைகளுக்காக சிறுவர்களை இணைத்துக்கொள்ள வேண்டாம் என புலிகளுக்கு யுனிசெப் வலியுறுத்தல்

இலங்கையில் சிறார்களை போர்ப்படையில் சேர்ப்பதை விடுதலைப்புலிகள் நிறுத்த வேண்டும் என்றும் ஏற்கனவே சேர்க்கப்பட்ட சிறார்களை அவர்கள் விடுவிக்க வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறார்களுக்கான அமைப்பான யுனிசெப் வேண்டுகோள் விடுத்துள்ளது.போர்நிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடிப்பதற்கான தமது கடப்பாட்டை இருதரப்பும் மீண்டும் உறுதி செய்ய வேண்டும் என்றும் மோதல் பகுதிகளில் சிறார்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான விவகாரமும் ஜெனிவா பேச்சுக்களில் மையமாக இடம்பெற வேண்டும் என்றும் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள யுனிசெப் அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களில் சிறார்களை படையில் சேர்க்கும் வீதம் சராசரியாக மாதாந்தம் 43 சிறார்கள் எனக் குறைந்துள்ள போதிலும் இந்த காலகட்டத்தில் 79சிறார்கள் மாத்திரமே விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

புலிகள் சிறுவர்களை படையில் சேர்ப்பதை முற்றாக நிறுத்த வேண்டும் என்றும் ஏற்கனவே தங்கள் போர் படைகளில் சேர்க்கப்பட்ட சிறார்களை விடுவிக்க வேண்டும் என்றும் இலங்கைக்கான சிறார் பாதுகாப்புப் பிரிவின் தலைமை அதிகாரி விக்டர் நைலன்ட் பி.பி.சி செய்தியில் தெரிவித்துள்ளார் (பி.பி.சி 14-02-2006) மற்றுமொரு கேள்விக்கு பதிலளிக்கையில் விடுதலைப் புலிகள் தம்மிடம் சிறார்கள் எவரும் கிடையாது என்று கூறுகின்ற போதிலும் அவர்களது படைகளில் இன்னமும் சிறார்கள் இருக்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு திட்டம் ஒன்றை முன்வைக்கக் கூடிய வலுவான நிலையிலும் அவர்கள் இல்லை

## தோழர் மோகன்- ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)

இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் வாழ்கின்ற தமிழர்களிடத்தில் உள்ள சாதி ரீதியான வேறுபாடுகளுக்கு எதிரான மறுமலர்ச்சிச் சூழலைத் தொடர்ந்து, மொழி ரீதியான ஒடுக்குமுறைகள், வன்முறை நிகழ்வுகள் காரணமாக இன விடுதலைக்கான சூழலில் தோன்றிய ஆயுதமேந்திய போராட்ட அமைப்புக்களில் ஈழ மக்கள புரட்சிகர விடுதலை முன்னணியும் ஒன்றாகும். இவ்வமைப்பானது மார்க்சிய தத்துவக்கோட்பாட்டின் அடிப்படையில் செயல்பட்டதெனக் கூறலாம் கிழக்கு மாகாணத்திலும் பார்க்க வடக்கு மாகாணத்தில் சாதி ரீதியான சமூக ஒடுக்கு முறைகள் மிக அதிகமாக அல்லது வெறித்தனமாகக்கூட நடைமுறையில் இருந்ததெனவும் சொல்லலாம். அப்படியான ஒரு சூழலில் இவ்வமைப்பானது ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களிடத்தில் பெற்றிருந்த செல்வாக்கைப்போல மேல் சாதிய வகுப்புகளில் பெற்றுக் கொள்ள முடியாத நிலை இருந்ததெனக் கொள்ளலாம். போராட்ட அமைப்புக்களை இன்ன இன்ன சாதிக்குரியதென விமர்சித்த நிலை காணப்பட்டதையும் அவதானித்திருக்க முடியும். இச்சூழ்நிலை பற்றி உங்கள் அவதானிப்பு?

மொழி ரீதியான என்பதை விடவும் இன ரீதியான ஒடுக்குமுறைகள், வன்முறைகள் என்பது தான் மிகச் சரியானது. இதனுடைய ஒரு அம்சமாக அந்த இனம் பேசுகின்ற மொழி புறக்கணிப்பும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளில் ஒன்றாக இருந்தது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எப்போதும் விஞ்ஞானபூர்வமான, பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டதல்லாத, முற்போக்கான கருத்துக்களின் அடிப்படையில் தான் செயற்பட்டு வந்திருக்கிறது. இப்போதும் செயற்பட்டு வருகிறது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முனணி அடக்கி ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் விடிவு, தொழிலாளி வர்க்க விடுதலை, பெண்களின் சமத்துவம் என்பவற்றை முன்னிலைப்படுத்துகின்ற அரசியலையே முன்னெடுத்து வந்திருக்கிறது. அந்த வகையில் அது சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளையும் அணுகியிருக்கிறது. சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் நடாத்திய போராட்டங்களுக்கு ஆதரவளித்திருக்கிறது. அத்தகைய போராட்டங்களுக்கு தலைமை தாங்கியும் இருக்கிறது. ஆனால் இது சாதி ரீதியாக மக்களை அணிதிரட்ட முயன்ற கட்சி இல்லை.

எங்களுடைய இயக்கத்தில் மட்டுமல்ல இதர ஆயுதப்போராட்ட இயக்கங்களிலும் இணைந்து போராட்டத்திற்கு பங்களிப்பு நல்கியவர்கள் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களே அதிகம் ஆனால், இந்த போராட்டத்தினால் ஈட்டப்பட்ட நலன்கள் அவர்களைச் சென்றடைந்ததோ மிகக் குறைவு.

20 வருட ஆயுதப்போராட்டம் சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பெற்றுத் தந்ததை விடவும் அவர்கள் பொருளாதார ரீதியில் கண்ட வளர்ச்சி, கல்வி பெற்றதனால் அடைந்த மாற்றங்கள் அதிகம் என்று சொல்லலாம்.

விடுதலை இயக்கங்களில் செயற்பட்டவர்களில் கூட சாதி ரீதியான தளைகளிலிருந்து வெளியே வராதவர்கள், வர முடியாதவர்கள், வர விரும்பாதவர்களே அதிகம். இதற்கு போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் நிலவிய கருத்து ரீதியான வளர்ச்சி, கருத்துக்கு இருந்த முக்கியத்துவம், விழிப்பை ஏற்படுத்தும் செயற்திட்டங்கள் என்பவற்றை இல்லாமல் செய்த சக அமைப்புகள் மீதான புலிகளின் பாய்ச்சல், ஜனநாயக மறுப்பு என்பவையும் காரணம்.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் தோன்றிய ஆயுதப் போராட்ட அமைபுகளில் ஆரம்ப காலத்தில், பெண்களை அமைப்புக்குள் அணிதிரண்டுவதில் கவனம் செலுத்தியதில் முக்கிய பாத்திரத்தினை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் வகித்தது. 1986 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினால் வடக்கு கிழககில் இயங்குவதற்கு தடை செய்யப்பட்ட பின்பும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அமைப்பானது இன்றுவரை இயங்கிக் கொண்டிருக்கிறது. மாகாணசபை நிர்வாக அலகைக்கூடத் தலைமையேற்று நடாத்தியும் இருக்கிறது. ஆனால், 1986 ஆம் ஆண்டிற்குப்பின் ஈழ மக்கள புரட்சிகர விடுதலை முன்னணி அமைப்பு பெண்களை அணிதிரண்டியதோ அல்லது நிர்வாக அலகில் பங்கு கொள்ள வைததோ இல்லையெனக் கூறலாம். ஆனால், இன்று நடைமுறையில், போர்க்களங்களில் பெண்களின் பங்களிப்பு ஆண்களோடு ஒப்பிடும் பொழுது சமமான அல்லது சற்றுக் கூடுதலாகக்கூட இருக்கலாம். இவ் வேறான சூழல் பற்றி?

போராட்டத்தின் போக்கில் நிலவிய ஆட்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக நாங்கள் பெண்களை அணிதிரட்ட முயலவில்லை. இந்த போராட்டத்தின் ஆரம்ப கால கட்டங்களிலேயே எமது சமூகத்தில் பெண்களின் நிலை பற்றிய தெளிவான பார்வை எமக்கிருந்தது. எமது சமூகத்தில் நிலவுகின்ற பெண் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக போராடியதுடன் எங்கள் கட்சியை சார்ந்தவர்கள் - விதிவிலக்குகள் இருந்த போதும் - அந்த கொள்கைகளை நடைமுறையிலும் பின்பற்றி வந்திருக்கிறார்கள்.

அன்றைய காலகட்டத்தை விடவும் இன்று பெண்கள் பெருமளவில் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. அன்றைக்கு பெண்கள் தொடர்பாக வீடுகளில், சமூகத்தில் நிலவிய கருத்துக்கள், கட்டுப்பாடுகள் பெருமளவு தளர்ந்து போயிருப்பதும் உண்மை. இன்று பெண்களையும் போராட்டத்துடன் இணைத்துக் கொண்டுவிட்டதாக பெருமை பேசுகின்ற புலிகளே அன்று ஈ.பி.ஆர்.எல்.எவ் உடன் இணைந்து போராட்டத்தில் பங்கெடுத்த பெண்களை இழிவாகப் பார்த்தார்கள், இழிவாக நடத்தினார்கள். பெண்களை பெருமளவில் இணைததிருக்கலாம் ஆனால் அந்தப் பெண்களுக்கு சமத்துவம் சம்பந்தப்பட்ட அமைப்புக்கு உள்ளேயே கிடையாது. ஆணாதிக்கத்திற்கு உட்பட்ட ஒரு பெண்கள் அமைப்பாகவே அவர்கள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். பெண்களுக்கான பிரிவு தனியாக்கப்பட்டிருக்கிறது. பெண்கள் பெண்களுக்கு மட்டும் தலைமை தாங்க முடியும். இங்கு சமத்துவம் பற்றிய பேச்சுக்கே இடமில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் பெண்கள் அமைப்பு அத்தகையதில்லை. ஈழ வாலிப முன்னணி என்ற ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் முன்னணி அமைப்பான இளைஞர் அணிக்கு ஒரு பெண்ணே தலைமை தாங்கி வழி நடத்தியிருக்கிறார். அன்றைக்கே எம்மை வழிநடத்திய தலைமை தோழர்கள் அந்தளவிற்கு தெளிவான பார்வையை கொண்டிருந்தார்கள், எங்களுடைய தோழர்களும் அதனை ஏற்று செயற்படும் பக்குவம் பெற்றிருந்தார்கள்.

இன்று பல ஆடைத்தொழிற் சாலைகளில் நூற்றுக்கணக்காக முழுக்க முழுக்க பெண்களே பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் இது அந்த தொழிற்சாலை உரிமையாளரின் பெண் விடுதலை கருத்தியலா அவரை அவ்வாறு செய்யத் தூண்டியது?

1986 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் பெண்கள் தொடர்பான கட்சியினுடைய நிலைப்பாட்டில மாற்றம் எதுவும் இல்லை. ஆனால், நீங்கள் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். 1986 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எங்களைப் போன்ற புலிகள் அழித்தொழிக்க முற்பட்ட அரசியல் இயக்கங்களுடன் பெண்கள் மாத்திரமல்ல ஆண்களும் கூட இணைந்து செயற்பட முடியாத நிலையே காணப்படுகிறது. அத்தகைய ஒரு ஜனநாயகச சூழல் இல்லாமலாக்கப்பட்டிருக்கிறது.

ஆரோக்கியமான அரசியல் கருத்தரங்குகள், விவாதங்கள், கலந்துரையாடல்கள், அவற்றுக்கூடாக மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், தொழிலாளர்கள் போன்றவர்களை அணிதிரட்டுதல் போன்ற நடைமுறைகளுக்கு இனறுள்ள தமிழ் அரசியல் சூழலில் இடமில்லை. மாறுபட்ட கருத்துடைய அமைப்புக்களுடன் தொடர்பு கொள்வது தேசத்துரோகம் என்று மக்களை மிரட்டிவரும் புலிகள் இயக்கம் மக்களை அச்சுறுத்துவதற்காக பலரை ஈவிரக்கமின்றி கொன்றொழித்திருக்கிறது.

இந்நிலையில் பெண்கள் மட்டுமல்ல இதர பிரிவினர் கூட பொதுவாழ்வில் இருந்து ஒதுங்கிப் போனவர்கள் தான் அதிகம்.

எமது கட்சி உருவாக்கிய மாகாண சபை நிர்வாகத்தில் பெண்களின் பங்கு நிராகரிக்கப்படவில்லை. பெண்கள் பல பொறுப்பான பதவிகளை ஏற்றுச் செயற்பட்டிருக்கிறார்கள். ஆனால், கடந்த கால (1986) கசப்பான அனுபவங்கள், அன்றிருந்த அரசியல் சூழல் என்பன ஏற்கனவே தேசிய விடுதலை, பெண்விடுதலை என்பவற்றிற்காக உழைத்த பலர் மீண்டும் பொதுவாழ்வில் ஈடுபடத் தயங்கும் நிலையை உருவாக்கியிருந்தது.

படித்தவர்கள்... அதாவது சட்டத்தரணிகள்தான் பாராளுமன்றத்திற்குச் செல்ல முடியும் என்ற கருத்து மிதவாத அரசியல் அமைப்புகளிடத்தில் இருந்தது. இன்னும் இருப்பதாக உணரக்கூடியதாக இருக்கிறது. மேலும், இலங்கையின் வடக்கு கிழக்குத்தமிழ் அரசியல்ச் சூழலில் அமைப்புகள் அல்லது கட்சிகளின் தலைமைப் பொறுப்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் தான் இருந்து வந்திருக்கிறார்கள். அவர்களால் தான சரியான தலைமைத்துவத்தைக் கொடுக்க முடியும் என்ற கருத்தும் இருக்கிறதல்லவா?

இக்கருத்து நிலை மிதவாத கட்சிகளிடம் மட்டுமல்ல ஆயுதப் போராட்ட அமைப்புகளிலும் உள்ளதாக கருதக் கூடியதாக இருக்கிறது. நீங்கள் அல்லது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அமைப்பு ஆயுதப்போராட்ட நிலையில் இருந்து மாறுபட்டு மாகாணசபை நிர்வாகச் சூழலிலும் இயங்கி இருக்கிறது. ஆதலால், இக்கருத்து நிலை பற்றிய உங்கள் அவதானிப்பு என்ன?

இந்தக் கருத்து மிதவாத அமைப்புக்களிடம் இருப்பது கூட எமது சமூகத்தின் பிரதிபலிப்பாகவே கொள்ள வேண்டும். உண்மையில் பாராளுமன்றம் செல்பவர்கள் மக்கள் மீது கரிசனை உள்ளவர்களாக, அவர்களது துன்ப துயரங்களிலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டும் என்ற அக்கறை கொண்டவர்களாக இருப்பது தான் முக்கியம். வன்னி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் 1989 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தேர்தல்களில் போட்டியிட்டு தெரிவானவர்கள் யாரும் நீங்கள் குறிப்பிடுவது போன்று சட்டத்தரணிகள் இல்லை. அவர்கள் எந்தக் கட்சியை சேர்ந்தவர்கள் என்பதை கூட அவர்கள் பிரதானப்படுத்தவில்லை அந்த மக்களுடன் வாழ்ந்து அந்தமக்களின் இன்ப, துன்பங்களில் பங்குகொண்டு அவர்களது பிரச்சினைகளுக்காகக குரல் கொடுத்தவர்களுக்கே அந்த மக்கள் வாக்களித்திருக்கிறார்கள்.

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இது முற்றிலும் மாறுபட்டதாயுள்ளது. கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இந்த மக்களின் போராட்டம், விடிவு, என தம்மை அர்ப்பணித்தவர்களை, புறந்தள்ளி தேர்தல் அறிவிக்கப்பட்டதும் விமானத்தில் வந்து இறங்கியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அது மாத்திரமல்ல இனக்கலவரங்களுக்கு காரணமாக இருந்ததுடன், பண்பாட்டுப் படுகொலையாக கூறப்படும் யாழ் நூல் நிலைய எரிப்பு, பயங்கரவாத தடை சட்டம், வெலிக்கடை படுகொலை என நாட்டை வன்முறைக்குள் தள்ளிவிட்ட ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் போட்டியிட்டு வியாபாரி ஒருவர் வெற்றியீட்ட முடிந்ததும் எமக்குப் படிப்பினைகளாயுள்ளன.

தமிழரசு கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் பினனர் ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் மத்தியிலும் வடக்கிலிருந்து வந்தவர்களே தலைமைப் பொறுப்பேற்றிருந்தார்கள் என்பது உண்மை தான். இது திட்டமிட்டு உருவாக்கப்பட்டதா என்பது ஆராயப்பட வேண்டும். நீங்கள் குறிப்பிடும் மிதவாத கட்சிகளின் இளைஞர் அமைப்புக்களில் அங்கம் வகித்தவர்களே பின்னர் ஆயுதம் தாங்கிய இயக்கங்களை கட்டினார்கள் எனவே தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட தலைமைத்துவம் உருவாக இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

எமது அமைப்பைப் பொறுத்தவரையில் கிழக்கில் அத்தகைய ஒரு தலைமைத்துவத்தின் உருவாக்கத்திற்கு தடைகள் இருக்கவில்லை. கிழக்கிற்கு தலைமை பொறுப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காக வலிந்து ஒரு தலைமைத்துவத்தை ஏற்படுத்துவதும் சரியாகாது என்ற அனுபவமும் எங்களுக்கு உண்டு.

எது எப்படியிருந்தபோதும் எமது அமைப்பை பொறுத்தவரையில் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த காலத்திலிருந்து இன்றுவரை கிழக்கின் பிரதிநிதித்துவம் புறக்கணிக்கப்பட்டது கிடையாது. மாறாக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தோழர்களை தலைமை ஸ்தானத்துக்கு உயர்த்துவதற்கு கட்சி எல்லாக்காலங்களிலும் அக்கறை எடுத்து செயற்பட்டிருக்கிறது. வடக்கு கிழக்கு மாகாண சபையில் நிதியமைச்சர் கிருபாகரன் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர். 1993 ஆம் வருடம் கட்சி காங்கிரசால் அங்கீகரிக்கப்பட்ட மத்திய குழுவில் 5பேர் கிழக்குமாகாணத்தை சேர்ந்தவர்கள். இவர்கள் முழுக்க முழுக்க கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி வேலைகளில் ஈடுபட்டவர்கள்.

1986 ஆம் ஆண்டிற்குப்பின், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிரான மாற்றுக்கருத்துச் சூழல் உருவாகியிருந்தது. இச்சூழல் இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசத்திலும் மட்டுமல்லாது புலம்பெயர் தமிழ்ப் பிரதேசங்களிலும் காணக்கூடியதாக இருந்தது. ஆனால், இன்று இச்சூழல் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு, ஈழ மக்கள் சனநாயகக் கட்சி என்ற இரு கூறுகளுக்கும் எதிரான மாற்றுக்கருத்துச் சூழல் என மாற்றமடைந்திருப்பதாக அவதானிக்கிறோம். எங்களுடைய இக்கருத்து பற்றி உங்கள் பார்வை?

புலிகள் சக போராளி இயக்கங்களை இல்லாமற் செய்து அவர்களது அரசியல் நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க முற்படடதிலிருந்து இந்த இயக்கங்களின் இருப்பை அவற்றின் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க போராட வேண்டிய சூழல் உருவாகியிருக்கிறது. இதர இயக்கங்களின் செயற்பாடுகளை முற்றாக முடக்கி விட முடியாத போதும் புலிகள் தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதிகள் நாங்கள் தான் என்று கூறி வருகிறார்கள். இது அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு புறம்பானது என்பதால் கருத்து ரீதியாக இதனை ஏற்றுக்கொள்ளாத போதும், இந்தப் போக்கு ஆபத்தானது என்பதை உணர்ந்து கொண்ட போதும். புலிகளின் ஆயுதமுனையில் நிறுத்தப்பட்டிருக்கும் மக்கள் இதற்கெதிராக பேச முடியாத நிலையில் இருக்கிறார்கள். இங்கு புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகிய இயக்கங்கள், கட்சிகளே புலிகளின் ஜனநாயக விரோத போக்குகள், மனித உரிமை மீறல்களை எதிர்த்துக் குரல் கொடுத்து வருகிறார்கள்.

ஆனால் வெளிநாடுகளில் பல்வேறு அமைப்புக்களும், சமூக பிரக்ஞை உள்ள தனி நபர்களும் இதற்கெதிராக எழுதியும் பேசியும் பல்வேறு போராட்டங்களை நடாத்தியும் வருகிறார்கள். வெளிநாடுகளிலும் அச்சுறுத்தல்கள் பாதிப்புக்கள் இருந்த போதும் அந்த நாடுகளின் சட்டம் ஒழுங்கிற்குள் ஓரளவு பாதுகாப்பும் இருப்பதனால் மாற்றுக்கருத்துக்களுக்கு வலுவூட்டும் நடவடிக்கைகள் முன்பு இருந்ததை காட்டிலும் பரந்தளவிலும், கூடுதலாகவும் உள்ளது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைப் பொறுத்தவரையில் அதன் தலைவர் இந்த போராட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்து செயற்பட்டு வருபவர், நீண்ட கால அனுபவமும், அறிமுகங்களும் அவருக்கு உண்டு. அத்துடன் இன்று அவருக்கு பல வளங்களும், வாய்ப்புக்களும் உண்டு; இருப்பினும் இவற்றைப் உபயோகித்து மாற்றுக் கருத்துள்ளவர்களை ஒன்றிணைக்க வேண்டிய இன்றைய காலகட்டத்திற்குரிய கடமையை, பிரதான தேவையை அக்கட்சி உணராமலிருக்கிறது, தவறிழைக்கிறது என்றே நான் கருதுகிறேன். அத்துடன் அந்தக் கட்சியின் அரசியல் வேலைகள், நடைமுறைகள் இந்த நோக்கங்களுக்கு விரோதமாக போன சம்பவங்களும் உண்டு.

ஏகபிரதிநிதித்துவத்தின் முன்னால் மாற்றுக்கருத்து அடிபட்டுப் போய்விடக் கூடாது என்பதற்காக கடந்த பாராளுமன்றத் தேர்தலில் நாங்கள் அவர்களுடன ஒன்றிணைந்து போட்டியிட்டோம். தேர்தலில் ஒரு பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொண்டதுடன் அமைச்சுப் பதவியும் கிடைத்தது. ஆனால் இன்று வரை வேறு எந்த வேலைத்திட்டத்திலும் எங்களை இணைத்துக்கொள்ளவில்லை.

வவுனியாவில் எமது அலுவலகம் கபளீகரம் செய்யப்பட்டுள்ளது. இவை அனைத்தும் மாற்றுக் கருத்துள்ளவர்கள் மத்தியில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கு மாறாக விரிசலை ஏற்படுத்தியுள்ளன. ஆனாலும், புலிகளின் ஏகபிரதிநிதித்துவக் கோட்பாடு, அதனை நிலைநிறுத்துவதற்காக புலிகள் மேற்கொண்டுவரும் படுகொலைகள், அழித்தொழிப்புக்கள் என்பவற்றுடன் ஈ.பி.டி.பி யின் போக்கை சமப்படுத்த முடியாது, சமப்படுத்தக் கூடாது.

ஈ.பி.டி.பி யினரின் நிலைப்பாடு விமர்சனத்துக்குரியது. அவர்கள் தமது நடவடிக்கைகள் குறித்து சுயவிமர்சனம் செய்து கொள்ள வேண்டும். புலிகள் நாங்கள் தான் ஏகபிரதிநிதிகள் என்று கூறுவதை விமர்சிக்கின்ற ஈ.பி.டி.பி நாங்கள் தான் மக்களை நேசிக்கின்ற, ஜனநாயகத்திற்காகப் போராடுகின்ற ஓரே கட்சி என்ற எண்ணத்தையும், அதே வகையான செயற்பாடுகளையும் கைவிடவேண்டும். மாற்றுக் கருத்துள்ள அனைவரையும் அவரவர்களுடைய சுயாதீனத்தை ஏற்று ஓரணியில் கொண்டுவருவதற்கு முயற்சிக்க வேண்டும்.

இன்று இலங்கையின் வடக்கு கிழக்குத் தமிழ் அரசியல்ச்சூழலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தோன்றமும், அதன் போக்கும் வடக்கு கிழக்குத்தமிழ் மக்களின் அரசியல்தீர்வுச் சூழலில் எவ்வித மாற்றத்தினை ஏற்படுத்தியிருக்கிறது? அல்லது ஏற்படுத்தும்?

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தோற்றமும், போக்கும் அரசியல் தீர்வுக்கு சாதகமான சூழலை ஏற்படுத்துவதற்கு பதில் பாதகமான சூழலையே உருவாக்கி வருகிறது. பொறுத்தது போதும் பொங்கி எழு, தலைவா போரைத் தொடங்கு என புலிகளின் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான நிலைப்பாட்டை நியாயப்படுத்தும் ஆர்ப்பாட்டங்களுக்கு தலைமை தாங்குபவர்கள் இந்த கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள். உண்மையில் எந்த மக்களும் போரை விரும்பவில்லை. பல்வேறு துன்பங்கள், கஸ்டங்கள், குறைபாடுகள் இருந்தாலும் இருக்கின்ற இந்த சமாதானச் சூழல் நீடிக்க வேண்டும் என்பதே மக்களின் ஆவலாக உள்ளது.

அமைதி, சமாதானம் என்பவற்றை சொல்லியே இவர்கள் மக்களிடம் வாக்கு பெற்றார்கள். ஆனால் இன்று தமது பா.உ பதவிகளை காப்பாற்றிக் கொள்ள, தமது சுய இலாபங்களுக்காக அதற்கு விரோதமாகவே செயற்பட்டு வருகிறார்கள்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு திட்டம் ஒன்றை முன்வைக்கக் கூடிய வலுவான நிலையிலும் அவர்கள இல்லை. புலிகள் சொல்வதை திருப்பிச் சொல்லுபவர்களாகவே, அதற்கு தலையாட்டுபவர்களாகவே இருந்து வருகிறார்கள். சுயமாக, தமது கருத்தை ஆணித்தரமாக முனவைக்கக்கூடிய நிலையில் அவர்களும் இல்லை. புலிகளும் பிறருடைய கருத்துக்களுக்கு மதிப்பளிக்கக் கூடிய நிலைக்கு இன்னும் வந்துவிடவுமஇல்லை. எனவே ஆரோக்கியமான மாற்றத்தை இவர்களால் எவ்வாறு ஏற்படுத்த முடியும்?

கூட்டமைப்பின் தோற்றம் கூட மக்களின் நலனிலிருந்து ஏற்பட்ட ஒன்றில்லை. மாற்று அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக வருவதை தடுக்க வேண்டும் என்ற எண்ணம் புலிகளுக்கு இருந்தது. தாங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக வந்துவிட வேண்டும் என்ற எண்ணம் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் கட்சித் தலைவர்களுக்கு இருந்தது. இந்த இரண்டு தரப்பாரின் எண்ணமும் நிறைவேறிவிட்டது. இப்போது மக்கள் பற்றிப் பேசுவது, இனப் பிரச்சினை பற்றிப் பேசுவது அரசாங்கம் ஒதுக்கிய பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்

தொடர்ச்சி 5ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சாதகமான வரவு செலவுத் திட்டமும், சகல இன, மத சமூகங்களிடையே நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான அவசியமும்



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் முன்வைத்த புதிய வரவு செலவுத்திட்டம் பிரதானமாக இலங்கையின் கிராமப்புற மக்களை முன்னிறுத்தி நிற்கிறது. கொழும்பை மையமாகக் கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பதிலாக நாட்டை மையமாகக் கொண்ட சமூகப் பொருளாதாரத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சமூகப் பொருளாதார விடயங்களில இன ரீதியாகவும், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், அரச ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர், நகர் புறங்களில் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்வோர், வறிய பின்தங்கிய பாடசாலைகளின் மாணவர்கள், தோட்டத் தொழிலாளர்கள், இலங்கையின் பல்வேறு சமூகங்களின் ஆன்மீகச செயற்பாடு ஆகிய விடயங்கள் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளன. உள்ளக கட்டமைப்பு வசதிகள தோட்டத் தொழிலாளர்கள் உட்பட வறுமைக்கோட்டின் கீழ் வாழும அனைத்து பிரிவு மக்களுக்கும் நன்மை பயக்குவனவாக அமைந்துள்ளன.

சமூக சாதகமான இந்த வரவு செலவுத்திட்டம் இலங்கையில் முன்னெடுக்கப்படுவதற்கு இலங்கையின் அராஜக சூழல் கட்டுப் படுத்தப்பட வேண்டும்.

ஓமந்தையால் பயணம் செய்யும் சாமான்ய பொதுமக்கள் மீதும் வடக்கு கிழக்கு உள்ளும் வெளியிலும் தமிழ், முஸ்லீம் மக்கள் மீதும் ஒரு சமூக சூறையாடலை நகழ்த்தும் புலிகளுக்கு இந்த வரவு செலவுத்திட்டம் ஒரு விரும்பத்தகாத அம்சமாகவே இருக்கும். சமூகங்களினுள் மோதலையும், பிளவுகளையும் ஏற்படுத்தி அதில் குளிர் காய முனையும் சக்திகளுக்கு இந்த வரவு செலவுத்திட்டம் அறவே ஒவ்வாதது.

எனினும் இந்த வரவு செலவுத்திட்ட யோசனைகள இலங்கையில் அமுலுக்கு கொண்டுவருவதாக இருந்தால் இலங்கையின் அராஜக சூழல் களையப்படுவதற்கான நடவடிக்கைகள் சமாந்தரமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

இலங்கை பல்லினங்களின் நாடு என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் சகல இன மக்களும் நாங்கள் இந்த நாட்டில் எமது சுயமரியாதை கௌரவத்துடன் தனித்துவங்களுடன் ஐக்கியமாக வாழ்வதற்கான நம்பிக்கைகள் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இலங்கை ஆசியாவில் வளம் கொண்டதும் சிறந்த உயிரினப் பல்லினப்பாங்கு கொண்ட நாடு. இந்த நாட்டை விட 50, 60 வருடங்களுக்கு முன்னர் பின்தங்கியதாக இருந்த நாடுகள் கூட மிக பாரியளவில் முன்னேற்றம் கண்டுள்ள நிலையில் இலங்கை ஏன் யுத்தமும் வறுமையும் என்ற கோரப்பிடிக்குள் சிக்கித்திணறுகிறது என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு ஜனநாயக முறைமைகளில் ஆரம்ப நாட்களிலேயே தீர்வு கண்டிருந்தால் தற்போது ஆசியாவில் முன்னேறிய நாடுகளின் அணியில் இலங்கை இருந்திருக்கும்.

இன முரண்பாட்டு சிக்கலே இந்த நாட்டை பேரழிவின் விளிம்பில் தள்ளியது என்ற எளிதான உண்மையை நாம் மறுத்துவிட முடியாது.

இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா உட்பட்ட ஆசிய நாடுகளதும் ஐக்கிய நாடுகள் சபையினதும் உதவியை பெறப்போவதாக தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ அவர்கள ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இலங்கையின் சகல சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளும் இனப்பிரச்சினை என்ற அரசியல் பிரச்சினையுடன் பின்னிப் பிணைந்திருக்கின்றன. எனவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது முதலும் முக்கியமானதுமாகும்.

அரசு மாத்திரமல்ல ஜனநாயகத்தையும் மனித உரிமையையும் இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியையும் அவாவுற்று நிற்கும் சக்திகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து நிரந்தரமான தீர்வொன்றை இனப்பிரச்சினை தொடர்பில் உருவாக்குவதற்கு பேதங்களை மறந்து ஒன்றிணைய வேண்டும். அரசியல் கட்சிகள், சிவில் சமூகத்தினர் எமது அண்டை நாடு சர்வதேச சமூகம் இவ்விடயத்தில் காத்திரமான பங்களிப்பை வழங்க முடியும்.

இனபபிரச்சினைக்கு முகம் கொடுக்கும் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் விதமான, ஜனநாயக பூர்வமான, திருதட்டமான, உருப்படியான தீர்வு முன்வைக்கப்படுவது அடிப்படைவாத, பயங்கரவாத சக்திகளை மக்கள் மத்தியில் இருந்து தனிமைப்படுத்துவதற்கு பாரிய பங்களிப்பை செய்யும் என்று நாம் திடமாக நம்ப முடியும். இல்லாவிடில்இந்த அடிப்படைவாத பயங்கரவாத சக்திகள் இந்த இனமுரண்பாட்டுச் சிக்கலில் குளிர்காய முனையும்.

இன்று கிழக்கில் முஸ்லீம்களுக்கு எதிரான வன்முறை அல்லது வடக்கில் சிங்கள மக்களுக்கு ஆத்திரமூட்டும் விதமாக நிகழும் சம்பவங்கள் குறுகிய பயங்கரவாத அபிலாஷைகளை எய்துவதற்காகவே மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையின் தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களின் இனஒற்றுமையும் இந்து, பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்த்தவ மக்களிடையே நம்பிக்கையை கட்டியெழுப்புவதும் இந்த இடத்தில் மிக அவசியமானவை.

இந்தநாடு நாம் வாழ்வதற்கு உகந்தது, பாதுகாப்பானது ஒளிமயமான எதிர்காலம் எமக்கு உண்டு என சகல பிரிவு மக்களும் இதயபூர்வமாக கருதுவதற்கான நிலைமைகளை உருவாக்குவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

# தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு திட்டம்..............

04ம் பக்கத் தொடர்ச்சி

திட்ட நிதியை கோயில்களுக்கும், நூல் நிலையங்களுக்கும் ஒதுக்குவது மீண்டும் பாராளுமன்ற கதிரைக்கு இலக்குவைத்தே மேற்கொள்ளப்படுகிறது.

மக்களின் பிரதிநிதிகளாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவை சந்தித்து புலிகளின் யுத்த நிறுத்த மீறல்கள் பற்றி பேசமுடியுமா? வரியென்ற பேரில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமை பற்றி பேசுவார்களா? அனைத்துப படுகொலைகளையும் கண்டிக்கிறோம் என்று கூறுபவர்கள் அந்தப் படுகொலைகளை முடிவுக்கு கொண்டுவர மக்களின பிரதிநிதிகளாக என்ன நடவடிக்கை எடுத்தார்கள். படுகொலைகளைப் புரிபவர்கள் புலிகள் என்பதால் அவற்றை நியாயப்படுத்தும் காரியத்தில் ஈடுபட்டு படுகொலைகளை மேலும் அதிகரிக்கச் செய்திருக்கிறார்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம். எந்த பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு வந்தாலும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தை பகிர்ந்தளிப்பார்கள் அதற்கு இவர்கள்தான் வேண்டும் என்றில்லை.

தமிழ் கூட்டமைப்பை சேர்ந்த 22 பேரது போக்கும் புலிகளின் தவறான நடவடிக்கைகளுககு நியாயம் கற்பிக்கும் வகைப்பட்டதாக உள்ளதால் புலிகளை இன்னும் மோசமான தவறுகளுக்கு இட்டுச் சென்று இதனால் தமிழ் மக்கள் இன்னும் இன்னல்களை அனுபவிக்க வேண்டிய நிலையே ஏற்படும்.

வாழ்நிலையே ஒரு மனிதனின் சிந்தனையை தீர்மானிக்கும். கூட்டமைப்பு பாராளுமன்ற உறுபபினர்களின் வாழிடம கொழும்பு அல்லது வெளிநாடு. எந்தவித அச்சுறுத்தலும் இல்லாத நிலையிலும் அவர்கள் தாம் பிரதிநிதித்துவம் செய்யும் மக்கள் மத்தியில் வாழ்வதில்லை. அவர்களது வாழிடம். குடும்பம், பிள்ளைகளின் கல்வி அனைத்தும் கொழும்பிலும், பிற நாடுகளிலும். இவர்களது குடும்பமும் இவர்களது பிள்ளைகளும் இங்குள்ள பாடசாலைகளில் கல்வி கற்று, இங்குள்ள வைத்தியசாலைகளில் மருத்துவ தேவைகளுக்காக தங்கியிருந்து, இங்குள்ள வியாபார நிலையங்களில் பொருட்களை கொள்வனவு செய்து, புலிகளின் படுகொலைகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைப்பார்களாயின் அதற்கு அர்த்தமும் பெறுமதியும் இருக்கும்.

1986ஆம் ஆண்டிற்குப்பின், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கெதிரான மாற்றுக்கருத்துச் சூழலில் இருந்த அமைப்புகளுடையே ஐக்கியம் இல்லாமை தொடர்ந்து காணப்பட்டு வந்திருக்கிறது. இந்நிலையின் உச்சமாக தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை ஆதரிக்கும் நிலை மாற்றுக்கருத்துச் சூழலில் இருந்தவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்நிலை இவர்களுக்குள இருந்த போட்டித்தன்மையின் வெளிப்பாடாக இனங்காணப்பட்டுள்ளது. இப்போக்கினை வைத்துப் பார்க்கும்போது இவர்களிடத்திலும் ஏகப்பிரதிநிதி எண்ணம் இருப்பதை உணர முடிகிறதல்லவா?

இதுவரை ஐக்கியம் ஏற்படாதது, ஐக்கியமின்மை என்பது ஒரு குறைபாடாக இருக்கலாம். ஆனால், அது தான் புலிகள் அமைப்பை ஆதரிக்கும் நிலைக்கு இட்டுச் சென்றதாக கூறிவிட முடியாது. சுய இலாப நோக்கங்களும், ஜனநாயகமற்ற சூழலில், படுகொலைகளுக்கு மத்தியில் உயிருக்கு உத்தரவாதமுள்ள, பாதுகாப்பான அரசியல் வழிமுறை என்ற எண்ணமும், தத்தமது கட்சிகளுக்குள் எழுந்த நெருக்கடிகளும் தான் இவர்கள் புலிகளை ஆதரிக்கும் நிலைக்கு இட்டுச் சென்றது. தவறுகளுக்கான காரணங்களை தங்களுக்குள் தேடாமல் வெளியில் தேடுகின்றவர்கள் இவ்வாறு கூறினாலும் உண்மை அது இல்லை. உண்மையாகவே மாற்றுக்கருத்தின் மதிப்பை உணர்ந்தவர்களால் இவ்வாறான ஒரு முரண்நிலைக்கு சென்றிருக்க முடியாது.

முன்னர் குறிப்பிட்டவாறு புலிகளின் ஜனநாயக உரிமை மறுப்புக்கு எதிராகக் குரலெழுப்புகின்ற கட்சிகள் இதர கட்சிகளின் ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளிக்கத் தவறக் கூடாது. ஆனால் இது பற்றிய தெளிவின்மை நம்மத்தியில் உள்ளது. இதில் மாற்றம் ஏற்பட வேண்டும். இதற்காகவும் பலமுனைகளில் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற வேண்டும்.

1986 க்குப்பின் எமது அரசியல் உரிமையை நிலைநாட்ட எமது அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்காக புலிகளுடன் போராடவேண்டி ஏற்பட்டது. 1994ஆம் வருடம் தீவுப்பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, புளொட் ஆகிய அமைப்புக்கள் தமது ஜனநாயக உரிமைகளுக்காக ஈ.பி.டி.பியுடனும் போராட வேண்டியிருந்தது. கடந்த பாராளுமன்றத் தேர்தல் பிரச்சாரங்களின் போது ஈழமக்கள் ஜனநாயக கட்சி புலிகளிடமிருந்து எதிர்நோக்கிய அத்தனை பிரச்சினைகளையும் 1994 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலின் போது ஈ.பி.டி.பி ஆதிக்கத்திலிருந்த தீவுப்பகுதியில் இதர தமிழ்க கட்சிகள் எதிர்கொள்ள நேர்ந்தது.

இதே போன்று மாகாண சபை காலத்தில் நாங்கள் நடந்து கொண்டதாகக் குற்றச்சாட்டுக்கள் உண்டு. இவை சீர்செயயப்பட வேணடும். அதேவேளை மாகாண சபை நிர்வாகத்தில் ஈ.என்.எல்.எவ் முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடனும், 1989 பாராளுமன்ற தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி, ரெலோ, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி போன்றவற்றுடனும் இணைந்து கருமமாற்றியிருக்கிறோம் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் அதில் பல குறைபாடுகள் இருக்கலாம் ஆனால் இன்றுள்ள நிலமையை விடவும் அது மேலானது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் மேலாதிக்கத்திற்கெதிரான சனநாயகத்திற்கான போராட்டம் முனைப்புக்கண்டு 19 ஆண்டுகளுக்கு மேலாகுகின்றன. ஏத்தனை உன்னதமான கல்விமான்களையும், அதிக பல கட்சித்தலைவர்களையும், உறுப்பினர்களையும் காவு கொடுத்து இதுவரைக்கும் இச்சனநாயகத்திற்கான போராட்டத்தில் எதைச் சாதித்துள்ளனர்?

கடந்த 19 ஆணடுகளாக ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்கான போராட்டம் முனைப்பாக நடைபெறவில்லை என்பதே தங்களது முன்னைய கேள்விகளிலும் கூட மறைபொருளாக உள்ளது. பேரினவாத ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராட புறபபட்ட ஒரு சமூகத்தில் ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுவதற்கு இத்தனை உயிரிழப்புக்கள் அவசியமா என்றால் அவசியமற்றது என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிடலாம். ஆனால் அடிப்படை ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுகின்ற ஒரு சூழலில் பாரிய இழப்புக்களுக்கு முகங்கொடுத்த போதும் அந்த உரிமைகளை நிலைநிறுத்த போராடாவிடில் இன்றுள்ள நிலையை விடவும் மோசமான ஒரு சூழலில் வாழவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும். இன்று ஈ.பி.டி.பியைச் சேர்ந்த பலர் முன்வரிசையில் நின்று உயிரைப் பறிகொடுத்துக் கொண்டிருப்பதால் தான் நீங்கள் கூட அரசியல் சமூக விடயங்கள் குறித்து எழுதி வெளியிட முடிகிறது.

1986 இல் ஈபிஆர்எல்எவ் செயற்படும வரை யாழ் குடாநாட்டில் செயற்பட்டு வந்த வெகுஜன அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், மாணவர் அமைப்புக்கள் எல்லாம் ஈ.பி.ஆர்.எல்.எவ் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானதும் செயலிழந்து போயின. புலிகள் அவற்றை விட்டு வைக்கவில்லை.

1986 இல் ரெலோ தலைவர் சிறிசபாரத்தினத்தை துரத்திப்பிடித்துப் படுகொலை செய்ததுடன் பல ரெலோ இயக்கப் போராளிகளையும் படுகொலை செய்தார்கள் சமூகவிரோதிகள் இந்தியாவின் கைக்கூலிகள் என்று காரணங்களும் சொன்னார்கள். ஆனால் இன்று அதே ரெலோ இயக்கத் தலைவர்களை அரவணைத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தின் தலைநகர் சென்னையில் எங்கள் செயலாளர் நாயகம் அமரர் [illegible] படுகொலை செய்ததுடன், 1985 இலிருந்து எமது அமைப்பை சேர்ந்த பல நூற்றுக்கணக்கான தோழர்களையும் துரோகிப் பட்டம் சூட்டி கொன்றொழித்தார்கள். ஆனால் அந்த தோழர்களின் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கி வழிநடத்தியவர்களை இன்று மன்னித்து ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

1998 இல் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் போட்டியிட்டதற்காக யாழ் மாநகர முதல்வர் சரோஜினி யோகேஸ்வரன், முதல்வர் சிவபாலன் போன்றவர்களை படுகொலை செய்த புலிகள் அவர்களுக்குப் பின் மாநகர முதல்வராக பதவி வகித்தவரை அவரது கட்சியை சார்ந்தவர் களை 2004 பொதுத் தேர்தலில் நிற்க வைத்து, பொதுமக்களை வாக்குப்போட வைத்து பாராளுமன்றம் அனுப்பியிருக்கிறார்கள் இவையும்கூட ஜனநாயகத்திற்கான போராட்டத்தினது விளைவுகள் என்று தான் எடுத்துக்கொள்ள வேண்டும். இவர்கள் அனைவரும் தத்தமது கட்சி தொண்டர்களின் உடல்களின் மீது ஏறிச் சென்று தான் இன்றுள்ள நிலையை அடைந்திருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பும் மற்றைய தமிழ் அமைப்புகளைப போல் கொழும்பு அரசியலுக்கு வருவதற்கான நகர்வுகளைச் செய்து வருவதாக நாம் கருதுகிறோம். போரைப்பற்றி அடிக்கடி நினைவூட்டினாலும் மக்கள் போராட்ட வடிவங்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தப்படுவதாகவே தெரிகிறது. இது பற்றி உங்கள் கருத்து?

புலிகள் பாராளுமன்றத்தையும் தங்களுடைய அரசியல் நகர்வுகளுக்கு சாதகமாகப் பயன்படுத்துவதற்கு அக்கறை கொண்டிருக்கிறார்கள். நேரடியாக தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு செல்லமுடியாத நிலையில் தமது ஆயுத அதிகாரத்தை பிரயோகித்து தமிழ் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். இந்தப் பிரதிநிதிகள் மக்களின நலனிலிருந்து பிரச்சினைகளை நோக்காமல் புலிகளை திருப்திப்படுத்துவதற்காகவே பாராளுமன்றத்திலும், பாராளுமன்றத்திற்கு வெளியிலும் பேசி வருவதை காண்கிறோம்.ஆயுதப் போராட்ட அரங்கில் இதர இயக்கங்களை நிராயுதபாணியாக்கிய புலிகள் அரசியல் அரங்கிலும் அவர்களை நிர்மூலமாக்குவதற்கு முன்னாள் ஆயுதப் போராட்ட அமைப்புக்களைச் சேர்ந்த சிலரையும், தமிழரசு, தமிழ் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்களையும் பயன்படுத்தி வருகிறார்கள்.

மக்கள் போராட்டத்தை முன்னெடுப்பவர்களுக்கு ஆயுதங்களை விடவும் மக்கள் மீது நம்பிக்கை இருக்க வேண்டும். மக்களின் சக்தி மீது நம்பிக்கையும், மக்களின் துயரங்கள் குறித்து கருணையும் இருக்க வேண்டும். மக்களின் கருத்துக்களுக்கு, அபிப்பிராயங்களுக்கு மதிப்பளிப்பவர்களாக இருக்க வேண்டும். புலிகளிடம் இந்த குணாம்சங்கள் கிடையாது என்பது மட்டுமல்ல தமக்கு ஆதரவாக இல்லாத மக்களின் குரலை, மக்கள் விமர்சனங்களை, ஜனநாயக ரீதியில் எதிர்ப்பு காட்டுவதை சகிக்க முடியாதவர்கள். ஆயதமுனையில் அவற்றை அடக்கி ஒடுக்கி வருபவர்கள். புலிகளை விமர்சித்த ஒரு பொதுமகன் குரல்வளை அறுக்கப்பட்டு வீதியில் எறியப்பட்டுக் கிடந்த காட்சி எதை காட்டுகிறது?

நாடக பாணியில் அமைந்த புலிகளின் வெகுஜன நடவடிக்கைகளை மக்கள் போராட்டமாக கருதிவிடமுடியாது. நிராயுதபாணியாக புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தச் சென்ற யாழ் பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜயவர்த்தனாவை மக்கள் வெட்டிக்கொன்றார்களா?

புத்தூரில் இராணுவத்தினிடம் நியாயம் கேட்ட மக்களோடு மக்களாக நின்று இராணுவ முகாமுக்கு கைக்குண்டுகளை வீசி இராணுவதினரின் பதில் தாக்குதலில் ஒரு இளைஞன் பலியாக நேர்ந்ததை மக்கள் போராட்டம் என்பதா? திருட்டு சம்பவங்களில் தொடர்பிருப்பதாக மரத்தில் கட்டிவைக்கப்பட்ட தினேஷ் என்ற இளைஞனை 4 மணி நேரம் சித்திரவதை செய்து கொல்வது மக்கள் போராட்ட வடிவமா? அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கச் சென்ற மக்களை வன்முறைகளை பிரயோகித்து தடுத்து நிறுத்தியதும், வாக்களித்தவர்கள் தாக்கப்படுவதும் மக்கள் போராட்டத்தில் நம்பிக்கை உள்ளவர்களின் வழிமுறையா?

யுத்தநிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் உள்ள காலத்தில் ஆயுதப் பிரயோகம் யுத்த நிறுத்த மீறல் என்ற நிலையில் புலிகளின் இராணுவ நடவடிக்கைகளுக்கு சங்கிலியனும், எல்லாளனும், குளக்கோட்டனும் மைக்கிரோ பிஸ்டலை கையில் எடுத்துக்கொண்டு அலைவது போலவே, அரசியல் நடவடிக்கை என்ற பேரில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்கள், மறியல்களை வெகுஜன அமைப்புக்கள் போல செயற்படும் புலிகளின் முன்னணி அமைப்புக்களான பொது அமைப்புக்களின் ஒன்றியங்களும், மாணவர் ஒன்றியங்களும் மேற்கொண்டு வருகின்றனர். இவர்கள் ஒவ்வொரு நகரங்களையும் அண்டியுள்ள சிகை அலங்கரிப்பாளர் சங்கம், வெண்மை வாணிப சங்கம், ஆட்டோ சங்கம், மினிபஸ் சங்கம் வர்த்தகர் சங்கம் போன்றவற்றை அல்லாட வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் உபயோகிக்கப்படுகிறார்கள்.

*நன்றி - நம்மொழி*
*தை -பங்குனி, 2006*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தலைமைகள் செய்யவேண்டியவை



மலையக மக்களின் பிரச்சினைகள் பிரத்தியேகமானவை. அவர்களின் இருப்பிடம் தொழில், கல்வி, சுகாதாரம ஆகிய அடிப்படை தேவைகளில் ஒப்பீட்டளவில் இலங்கையின் அனைத்து இன சமூகங்களையும் விட மோசமான வாழ்நிலையொன்று அவர்களுக்கு இருக்கிறது. அடுத்ததாக அவர்கள் இலங்கையின் சிங்கள, முஸ்லீம் மக்களுடன் இணைந்து செயற்பட வேண்டிய தேவை இருக்கிறது.

மலையக கட்சிகள் தமக்கிடையே ஒரு புரிதலை ஏற்படுததிக் கொள்வதும மலையக மக்களின் அபிலாஷைகளை பலமாக வலியுறுத்துவதும் அவசியம்.

ஆனால் சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் விழுவது போல் புலிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு மலையகத் தலைமைகள் தம்மை உட்படுத்துவது ஆரோக்கியமான விடயமல்ல.

ஏற்கனவே வடக்கு கிழக்கில் புலிகளுக்கு ஆட்சேர்ப்பதில் பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கடந்த வருடம் மார்ச் மாதத்தில் கருணா அணியினர் பிரிந்து சென்றதன் பின்னர் ஆட்சேர்ப்பு மிகவும் நெருக்கடியாகியது.

ஆனாலும் சுனாமி அகதி முகாம்களிலும், கோயில்களிலும் சிறுவர் சிறுமியரை பிடித்துச் சென்றார்கள்.

தற்போது மலையகத்தை அவர்கள் ஆட்திரட்டுவதற்கான வளமுள்ள நிலமாக பார்க்கிறார்கள். பிரபாகரனின் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கு மலையக இளைஞர், யுவதிகளை பலியாக்கத் தயாராகிறார்கள். இது மலையக மக்களின் அபிலாஷைகளுக்கும், இருப்புக்கும் பெரும் கேடு விளைவிக்கும் அம்சமாகும். இனரீதியான முரண்பாடுகள் தீவிரமடைவதற்கும் இது வழிவகுக்கலாம்.

எனவே இ.தொ.கா, ம.ம.மு ஆகிய கட்சிகள் குறுகிய நாளாந்த அரசியல் நலன்களை புறந்தள்ளிவிட்டு தொலை நோக்குடன் பிரச்சினைகளை அணுக வேண்டும்.

எத்தனை மலையக இளைஞர்கள் வடக்கு கிழக்கில் பல்வேறு இயக்கங்களிலும் இருந்து மடிந்திருக்கிறார்கள். ஏன் ஒரு குறிப்பிட்ட காலத்தில் முஸ்லீம்களில் கணிசமானோர் பல்வேறு இயக்கங்களில் அங்கத்துவம் வகித்தார்கள்.

சொந்த சமூகத்தினுள்ளேயே சகோதர இயக்கங்களையும் அவற்றின் தலைவர்களையும், மிதவாத அரசியல் கட்சியின் தலைவர்களையும் இடதுசாரி அரசியல் கட்சித் தலைவர்களையும் புலிகள் அழித்தொழித்த வரலாறு மலையகத் தலைவர்களுக்கு தெரியாமல் இருப்பதற்கு நியாயமில்லை.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை, வடக்கின் முஸ்லீம்களை ஊரோடு 15 வருடங்களுக்கு முன்னர் விரட்டியது இவையெல்லாம் கண்முன்னே சமகாலத்தில் இருக்கும் சாட்சியங்கள்.

புலிகளின் தலைவர்களை மலையகத் தலைமைகள் சந்தித்துவிட்டுப் போன மறுகணமே புலிகள் "கொல்லைப்புறமாக கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டு இப்ப கள்ளரெல்லாம் எங்களிட்ட விழுந்தடிச்சு வருயினம்" என்று நிச்சயம் எள்ளி நகையாடியிருப்பார்கள்

திம்பு பேச்சுவார்த்தைக் காலத்தில ஈ.என்.எல்.எப் என இணைந்திருந்த கட்சிகளின் தலைவர்கள் எல்லோரையுமே புலிகள் படுகொலை செய்து காட்டிக் கொடுத்தார்கள்.

தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற பெயரில் எட்ட நின்று கூனிக் குறுகி பேசும் அடிமை சேவகர்களாக திகழும் கட்சி உதிரிகளை சேர்த்து வைத்திருக்கிறார்கள். புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் நிகழ்ச்சி நிரலில் இணைந்தால் இந்த அடிமைகளின் பட்டியலிலேயே அவர்கள் சேர வேண்டும். அவர்களுக்கென்று எந்த கருத்தும் இருக்க முடியாது. மலையக இளைஞர்கள் நாளாந்தம் துன்பங்களை அனுபவிக்க வேண்டி வரும். அற்ப சொற்ப மலையக அபிவிருத்தியும் பின்தங்கிவிடும். எனவே மலையகத் தலைவர்கள் தீர்க்கத்தரிசனத்துடன் சொந்தமாக தமக்கிடையே ஒரு புரிதலை ஏற்படுத்த வேண்டும். அவர்கள் யாருக்கும் குடியாகிவிடக் கூடாது.

பாலசிங்கம் திருமலை சம்பந்தருடன் தான் லண்டனில் வைத்து என்ன மொழியில் பேசினார் என்பதை புலிகள இயக்கத்தில் இருந்து அண்மையில் வெளியேறிய ஜெயதேவன் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். அத்தகைய அவமானங்கள் மலையகத் தலைவர்களுக்கும் வேண்டாம். ●

# சிவப்பு விளக்கு பாலசிங்கத்தின் வக்கிரம்

ஊரில கசிப்பு வித்ததென்றும் ஆமிக்காரனுடன் கதை வைத்திருந்ததென்று மூன்று பிள்ளைகளின் தாயைச் சுடுகிறார்கள். ஐயர் உளவாளி, பெண்களுடன் தகாத சேட்டைகள் புரிபவர் என்று சுட்டுக்கொல்கிறார்கள் இவ்வாறு அப்பாவிகளை சமூகத்தில் ஒழுக்கத்தின் பேரில் சுட்டுக்கொல்லும் ஒழுக்க சீலர்கள் - தமிழர்களின் கல்தோன்றி மண்தோன்றா காலத்து ஒழுக்கத்தையும், பண்பாட்டையும், துப்பாக்கி மூலம நிறுவும் புலிகளின் அதிஉயர் அரசியல் ஆலோசகர், தாம் தாய்லாந்தில் அடித்த திருக்கூத்தை, லூட்டியை லண்டன் மாநகரில் நடந்த மாவீரர்தின ஆபாச உரையில் பச்சையாகவே வெளிபடுத்தியிருந்தார்.

கடந்த ஒரு மாவீரர் தினத்தில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பற்றி வக்கிரமான வார்த்தைகள் கொண்டு பேசியிருந்தார்.

தற்போது தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கிறோம் பேர்வழிகள் என்று தாய்லாந்து சென்று அங்கு மாலை நேரங்களில் மார்க்கட் பகுதியில் மெனக்கிட்டு விட்டு பொடியள் பொழுதுபடவிட்டு இரவில் தான் வருவார்கள் என்று குறிப்பிட்டிருந்தார். வெள்ளைகாரமனைவிக்கு பயந்து கொண்டு தானும் அவர்களுடன் போய்வந்தது பற்றியும் சிவப்பு விளக்கு பாலசிங்கம் இயம்பியிருக்கிறார்

தவிர போக்குவரத்து தடைவந்தாலும் தன்னிடம் பிரித்தானிய பாஸ்போர்ட் இருப்பதாகவும், தமிழ்ச்செல்வனுக்கும், புலித்தேவனுக்கும் தான் பிரச்சினை என தங்களுக்குள் எழுந்திருக்கும குடுமிபிடிச் சண்டையையும் சூசகமாகச் சுட்டி காட்டியிருக்கிறார்.

மாமனிதர் பட்டம் வழங்குவது பற்றியும் அவர் கிண்டல் வேறு பண்ணியிருக்கிறார். தான் தனியாக வீதியால் நடந்து வந்தபோது பாலா அண்ணை தனியாக வருகிறீர்களே பிரச்சினை இல்லையா என்று யாரோ கேட்டதற்கு குளிரில கார்ட்அட்டட்டெக் (Heart) வந்து சாவதை விட ரோட்டில வந்து யாரும் சுட்டால் மாவீரர் பட்டம் கிடைக்கும் என்று சொல்லி அந்த பட்டத்துக்கும் ஒரு நக்கல் விட்டிருக்கிறார். எனக்கேதும் நேர்ந்தால் மாமனிதர் பட்டம் கிடைக்கும் என்று நக்கலாக சொல்லியிருக்கிறார்.

தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி அவர்கள் பற்றி குறிப்பிடும் போது அவர் உலகம எல்லாம் சென்று வருகிறாராம் ஆனால் கிளிநொச்சி சென்று வரமுடியவில்லை என்று ஆதங்கப்பட்டாராம். அவர் கிளிநொச்சிக்கு செல்லலாம் அங்கு பொட்டம்மான் ஹோட்டல் நடத்துவதாக நக்கல் பண்ணியிருந்தார். பாலசிங்கத்திற்கு பொட்டம்மான் ஹோட்டல் நடத்தும் இடம் தெரிந்திருக்கிறது அவர் கூறுவது புலிகளின் நாகரிக மனித உலகம் வெட்கித் தலைகுனியும் சித்திரவதைக் கூடத்தையே.

பொட்டம்மான் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி அவர்களின் படுகொலை தொடர்பாக தேடப்படும் குற்றவாளி.

தவிர இநதியாக்காரன், சிங்களவன், மொட்டை வார்த்தை அவதூறு சித்து விளையாட்டுக்களில் ஈடுபட்டார்.

பாலசிங்கத்தை பொறுத்தவரை தமிழர் பிரச்சினை ஒரு முசுப்பாத்தியாகத்தான் அவருக்கு இருக்கிறது. அவர் சித்திரவதைகள், படுகொலைகள்கூட நகைச்சுவை உணர்வை ஏற்படுத்துகின்றன. சிறுவர்களின் கழுத்தில் சயனைட்டை கட்டி விட்டு மாண்டு போன ஆயிரக்கணக்கானவர்களை நினைவு கூருவதாக கூறும் தினத்தில் பாலசிங்கத்தின் பகிடி சேட்டை வம்புக்கதைகளை என்னவென்பது?

போதாக்குறைக்கு ஊரில் மாத்திரமல்ல ஐரோப்பாவிலும் மாற்று குரல்கள் கேட்கத்தொடங்கியுள்ளதையிட்டு பாலசிங்கம் பீதி கொண்டுள்ளார். மாவீரர்தினம் என்பது ஆபாசம் பேசி, விசிலடித்து, பாலியல் வக்கிரங்களைத் தூண்டி நினைவுகூரும் தினமாகத்தான் பாலசிங்கத்துக்கு இருக்கிறது.

நோர்வே பணத்தில் தாய்லாந்தில் சொகுசு பண்ணியதை அவரது வக்கரித்த வாக்குமூலமே உறுதி செய்திருக்கிறது.

பனியிலும், குளிரிலும் சறுக்கி விழுந்து உழைத்த பணம் எவ்வாறு வீண்விரயம் செய்யப்படுகிறது என்பதை பகுத்தறிவு உள்ளவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

புலிகளின் கொயரிங்கும், கோயபல்ஸ்ஸும், ரொசன்பேர்க்கும் பாலசிங்கமே. பாலர்களின் மரணத்தில் பாலா நடத்தும் திருவிழா மனித நேயமும், ஜனநாயக உணர்வும் கொண்டவர்களுக்கு விசனத்தையும், மனக்கிலேசத்தையும் ஏற்படுத்துகிறது.

பாலசிங்கத்தின் பேச்சை புலிகள் இயக்கத்தில் இருந்து மாண்டுபோன பிள்ளைகளின் ஏழை பெற்றோர் கேட்டிருந்தால் இரத்தக்கண்ணீர் வடித்திருப்பார்கள். மண் அள்ளி வீசி தூற்றியிருப்பார்கள்.

இந்த மாதிரியெல்லாம் புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் பேசியிருக்கும் போது புதன் கிழமை வீரகேசரி அநாதைகளாக அகதி முகாம்களில் கிடக்கும் லட்சக்கணக்கான மக்கள் குறித்து சர்வதேச சமூகம் ஏன் பேசவில்லை என்று பாலசிங்கம் வினாவியதாக மகுடமிட்டு சமூகப் பொறுப்புடன் அவர் பேசியிருப்பது போல் ஆபாசமும், நையாண்டியும், கிண்டலும்,வக்கிரமும் நிறைந்த பேச்சுக்கு மூடுதிரை போட்டிருக்கிறது. தீந்தை பூசியிருக்கிறது. ●

# நாகரிகமான சுயமரியாதையுடன் கூடிய வாழ்க்கையின் அவசியம்

ஒரு சமூகப் பொறுப்புணர்வுள்ள அரசியல் இயக்கம் தான் எந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறதோ அல்லது எந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறுகிறதோ அந்த மக்களின் அரசியல், சமூகப் பொருளாதார நலன்களில் அக்கறை செலுத்த வேண்டும். அதற்காக தன்னை அர்ப்பணிக்கத் தயாராக இருக்க வேண்டும். மொத்தத்தில் சமூகத்துக்கு விசுவாசமாகவும், சமூகத்தை சுபிட்சப்பாதையில் முன்கொண்டு செல்வதாகவும் அமையவேண்டும்.

மாறாக தன்மையவாத நோக்கங்களும், பேராசையும், கொலை வெறியும சமூக சூறையாடலும் கொண்ட இயக்கம் மக்கள் விரோத இயக்கமே.

அந்த வகையில் இலங்கையில் தமிழ் மக்களின் விடிவுக்காக போராடுவதாக பிரச்சாரம் செய்யும் புலிகள் இதில் எந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நாங்கள் கண்டுகொள்ள வேண்டும்.

சக மனிதர்களை மாற்றுக்கருத்துக் கொண்டவர்களை வெவ்வேறு இன சமூகங்களைச் சேர்ந்த மனிதர்களை அரசியல் தலைவர்களை கொலை செய்பவர்கள், அச்சுறுத்துபவர்கள், ஜனநாயக உரிமைகளை, மனித உரிமைகளை, சிறிதளவும் மதியாதவர்கள, மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்ய லாய்க்கற்றவர்கள் மாறாக பேரழிவுக்கு வித்திடுபவர்கள் என்றே பொருள் கொள்ளலாம்.

தமிழ்ச் சமூகம் பொருளாதாரம், கல்வி, கலாச்சாரம், போன்ற ஜீவாதாரமான விடயங்களில் சமகால சவால்களுக்கு முகம் கொடுத்து முன்னோக்கி செல்ல வேண்டும. அதேவேளை தமிழ சமூகத்தினுள் ஜனநாயகம் சகல அம்சங்களிலும் நிலவ வேண்டும். சமூக பொருளாதார வளங்கள் பகிரப்படுவதிலும், சமூக ஒடுக்குமுறைகள் இல்லா தொழிக்கப்படுவதிலும் பெண்கள், சிறுவர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படுவதிலும் மாத்திரமே சமூகம் முன்னோக்கி நகர முடியும்.

அதற்கு சமூகத்தில் ஜனநாயகம், மனித உரிமை என்பன அடிப்படை நிபந்தனைகளாக அமைகின்றன. இந்த விடயங்கள் யாவுமே இவற்றின் பிரிக்க முடியாத அம்சங்களாக அமைகின்றன. ஜனநாயகத்தை சிறிதளவும் சகித்துக் கொள்ளாத சமூகச்சூறையாடல் வன்முறைகள் மூலம் அதிகாரத்தை நிலை நாட்ட முனையும் குழுவொன்று இதனை சாதிக்குமென சொல்வது சுத்த அயோக்கியத்தனமாகும். அதுமாத்திரமல்லாமல் அது பகுத்தறிவிற்கும் முரணானது.

நாகரிகமான சுயமரியாதையுடன் கூடிய கௌரவமான வாழ்க்கை இங்கு அவசியப்படுகிறது. மனித பண்பு என்பது இங்கு முன்னிறுததப்பட வேண்டிய அம்சமாகும்.

இதுவரை குறிப்பிட்டவை தமிழ் சமூகத்தின் அகநிலை சார்ந்தவை. தமிழ்ச்சமூகத்தின் அகநிலை இலங்கையின் அனைத்து மக்கள் பிரிவினர் சமூகங்களையும் விட சீரழிந்ததாகவும், கேடு கெட்டதாகவுமே காணப்படுகிறது. நாகரிக உலகத்து [illegible] கையில் இது நினைத்துப் [illegible] யாத கயமைத்தனம் நிறைந்ததாக காணப்படுகிறது.

படுகொலைகளை தமிழ் ஊடகங்கள் நியாயப்படுத்துகின்றன. இவை தொடர்பாக சமூகத்தில் நீடித்த மௌனம் காக்கப்படுகிறது. அது பீதியின் அடிப்படையில் எழுந்ததாகவோ அல்லது கையாலாகாத்தனத்தில் இருந்து எழுந்ததாகவோ காணப்படலாம். ஆனால் அது நிலவுகிறது. இது தொடர்ந்து நிலவும் வரை இந்தச் சமூகம் அதலபாதாளத்தை நோக்கி சீரழிவை நோக்கியே பயணம் செய்யும்.

சமூகத்தினுள் மாத்திரமல்ல சக சமூகங்களை உலக மனிதர்களை பரஸ்பரம் மதித்து நடக்கும் உணர்வு இங்கு காணப்படவில்லை. ஆதிக்கம் வகிக்கும் குழு உயர் விழுமியங்களை நாசம் செய்துள்ளது.

சமூகத்தின் மறுநிர்மாணத்திற்கு இச் சீரழிவிலிருந்து மீண்டெழுவதற்கு கடுமையாக உழைக்க வேண்டும். இடையறாது போராட வேண்டும்.

எமது சமூகத்து மனிதர்கள் பலர் உலகின் பல்வேறு பாகங்களிலும், இலங்கையின் பல்வேறு மக்கள் சமூகங்களிடமும் சேர்ந்து இணைந்து வாழ்பவர்களாக காணப்படுகிறார்கள். இவர்கள் ஒருங்கிணைய வேண்டும். ஜனநாயக நடைமுறைகளை எமது சமூகத்தினுள் கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும்.

சுருங்கி வரும் உலகில் விரிந்த பார்வை, பரந்த நோக்கு என்பது ஜீவா [illegible] அதில்தான் இருக்கிறது. ●

# இலங்கை இனப்...........

01ம் பக்கத் தொடர்ச்சி

சமாதானப் பேச்சு வார்த்தைகளில் முஸ்லீம் சமூகத்தினரும் தனித்தரப்பாக கலந்து கொள்ள வழிசமைக்கப்பட வேண்டும் எனவும், இறுதித் தீர்வை முன்னெடுப்பதற்கு இலங்கையிலுள்ள சகல தரப்பினரதும் கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் எனவும் தமிழ் சமாதான சபை கருத்துக கொண்டுள்ளது.

கடந்த இரண்டு தசாப்த கால இன யுத்தம் இலங்கையை சீரழித்து, குறிப்பாக வட-கிழக்கிலுள்ள தமிழ் முஸ்லீம் மக்களின் வாழ்வின் சகல அம்சங்களையும் சிதைப்பதற்கே வழிசமைத்துள்ளது என தமிழ் சமாதான சபை ஏற்பாட்டாளர்கள் கருதுகிறார்கள். அடுத்த வாரம் ஜெனிவாவில் ஆரம்பமாகவிருக்கும் சமாதான பேச்சுவார்த்தையில் பங்குபற்றவுள்ள இருதரப்பாரும், இலங்கையிலுள்ள சகல இன மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில், அதிகாரப் பரவலாக்கத்துடன் கூடிய ஒரு நிரந்தரமான தீர்வை அடைவதற்கு உள விருப்புடன் நேர்மையாக முயற்சி செய்ய வேண்டும் என்பதே தமிழ் சமாதான சபையின் எதிர்பார்ப்பாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லோகநாதன் மாஸ்டர் மீதான கோழைத்தனமான தாக்குதல்.



ஜேர்மனி நொயஸ் நகரில் வசிக்கும் 55 வயதுடைய வைத்தியநாதன் லோகநாதன் நவம்பர் மாதம் 12ஆம் திகதி மூன்று அல்லது நான்கு மனிதர்களினால் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளார். லோகநாதன் மாஸ்டர் என தமிழ் சமூகத்தால் அறியப்பட்ட திரு. லோகநாதன், யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் 1980களின் ஆரம்பங்களில் ஆசிரியராக இருந்து பின்னர் கடந்த இருபது வருடங்களாக ஜேர்மனியில் வசித்து வருகின்றார். இவர் 1980களின பிற்பகுதிகளில் வெளிவந்த "அறுவை" பத்திரிகையின் ஆசிரியரும் ஐரோப்பிய புலம்பெயர்ந்த தமிழர்களின் இலக்கியச்சந்திப்பின் ஸ்தாபர்களில் ஒருவருமாவர்.

அக்டோபர் மாத மத்தியில் யாழ்ப்பாண பாடசாலை அதிபர்களான நடராஜா சிவகடாட்சம், கனகபதி இராஜதுரை ஆகியோர் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி நொயஸ் நகரில் திரு. லோகநாதன் ஒரு நினைவுதினக் கூட்டத்தினை ஒழுங்கு செய்திருந்தார். இக் கூட்டத்தை ஒழுங்கு செய்த நாளிலிருந்து நினைவுதினக் கூட்ட நாள் வரை லோகநாதனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் புலி இயக்க ஆதரவாளர்களிடமிருந்து பல மிரட்டல்கள் வந்தன. இந்த மிரட்டல்கள் பற்றிப் பொலிசாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டு கூட்டம் பொலிஸ் பாதுகாப்புடன் நடாத்தப்பட்டது.

இக்கூட்டத்திற்கு முன்னாள் ஆசிரியர்கள், புத்திஜீவிகள் மற்றும் கவிஞர்களென நூற்றிற்கும் மேற்பட்டவர்கள் பல ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் கலந்து கொண்டனர். "கந்தக ரவைகள் மூடுமா கல்வியின் கண்களை?" என்னும் தலைப்பில் கவிதைகள் கூட்டத்தில் வாசிக்கப்பட்டன. இக்கூட்டம் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால ஐரோப்பிய மற்றும் இலங்கை நேயர்களுக்கு நேரடியாக ஒலிபரப்பப்பட்டது. அண்மைய மாதங்களில் நடைபெற்ற ஏனைய கூட்டங்கள் போலவே புலம் பெயர்ந்த தமிழர்கள் மீது புலி தலைமைத்துவம் செலுத்த விரும்பும் சர்வாதிகாரத்திற்கும், புலிகளின் ஜனநாயக விரோதக் கோரிக்கையான ஏகப்பிரதிநிதித்துவக் கொள்கைக்கும் ஒரு சவாலாகவே இந்த நினைவுதினக் கூட்டம் அமைந்திருந்தது.

ஒரு வாரத்திற்குப்பின், நவம்பர் 12ம் திகதி சனிக்கிழமை இரவு 11 மணிக்கு திரு. லோகநாதன் ஜெர்மனியிலுள்ள எசன் நகரில் தனது கடையினை மூடிக்கொணடிருந்த பொழுது தாக்கப்பட்டார். அவர் பின்னாலிருந்து தாக்கப்பட்டதோடு அவரைத் தாக்கியவர்கள் பியர் போததல்களினால் தலையினைத் தாக்கியும், இரும்புக் கம்பியால் அடித்து காலையையும் முறித்தனர். கேவலமான முறையில் முகம் குப்புற வீழ்த்தப்பட்டு திரு. லோகநாதன் தாக்கப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது, "கூட்டம் வைக்க உனக்குத் துணிவிருக்கா?" எனத் தாக்கியவர்ளில் ஒருவர் சத்தமிட்டதை அவர் கேட்டார். அயலிலுள்ள கடைக்காரர்கள் அவரைக் காப்பாற்றுவதற்காக விரைந்த பொழுது திரு. லோகநாதனைத் தாக்கியவர்கள் தப்பியோடி விட்டார்கள். அவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே அவரது தலைக்காயத்திற்கு பன்னிரண்டு தையல்கள் போடப்பட்டதுடன் முறிந்த காலுக்கும் வைத்திய சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஜேர்மன் பொலிசாரும் அதிகாரிகளும் இதற்குக் காரணமானவர்களை விசாரித்து நீதியின் முன்னே நிறுத்துவதோடு இத்தாக்குதலுக்கும் புலி இயக்கத்தினருக்கும் மற்றும் அதனது முன்னணி அமைப்பபுகளுக்கும் தொடர்பிருக்கின்றதா அல்லது இந்த குற்றச்செயலுக்கு உடந்தையான இருந்தனரா என்பதையும் விசாரிக்க வேண்டுமென இலங்கை ஜனநாயக அரங்கம் வேண்டுகோள் விடுக்கின்றது. உண்மையிலேயே சமீப மாதங்களில் மாற்றுக் கருத்துடைய புலம்பெயர்ந்த தமிழர்கள் மீது மிரட்டல்கள் அதிகரித்துள்ளன. கடந்த மாதம் ஆஸ்திரேலியாவில் அரசியல் பத்தி எழுத்தாளரான செல்லையா நாகராசாவிற்கு புலிகளின் கொலைப்பிரிவான எல்லாளன் படையிடமிருந்து கொலை மிரட்டல் கிடைத்ததோடு கனடாவில் பல மாற்றுக் கருத்துச் செயற்பாட்டாளர்கள் புலி இயக்கத்தின் "நிதர்சனம்" என்கின்ற இணையத்தள்த்தால் இலக்கு வைக்கப்படுகின்றனர்.

திரு. லோகநாதன் மீதான இந்தத் தாக்குதல் 1990களில் நடை பெற்றது போல புலி இயக்கத்தினர் மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் மீது மீண்டும் தாக்குதல்களை ஆரம்பித்திருப்பதையே காட்டுகின்றது. புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் மாற்றுக் கருத்துக்கள் நன்கு வேரூன்றியிருப்பதை புலிகள் எப்பொழுதும் அறிந்து வைத்துள்ளனர். இவ்வாறான சவால்கள் தமிழ் சமூகத்தின் முழுவதின் மீதான அவர்கள் தலைமைத்துவத்திற்கும் போர் முஸ்த்தீபுககளுக்கும் ஆபத்தானதோடு மேற்கிலுள்ள அவர்களின் அரசியல் பொருளாதார அடித்தளத்திற்கு கேடு விளைவிக்கும் என எண்ணுகின்றனர்.

1994ம் ஆண்டு மாற்றுக் கருத்துக் கொண்ட சபாரத்தினம் சபாலிங்கம் புலிகளினால் பட்டப்பகலில் பாரிசில் கொலை செய்யப்பட்டார். சபாலிங்கத்தின் கொலையாளிகளோ அதைச்செய்யத் தூண்டியவர்களோ நீதியின் முன்னே கொண்டுவரப்படவில்லை. 1993ல் அவரது மாற்றுக் கருத்துக்கள் தாங்கிய எழுத்துக்காக டி.பி.எஸ். ஜெயராஜ் புலிக்காடையினரால் ரொறொன்ரோவில் பேஸ்போல் மட்டையால் தாக்கப்பட்டபொழுது அவரது தலை காயமடைந்தும் காலொன்றும் முறிந்தது. புலி இயக்கத்தினர் மேற்கு நாடுகளில் தமது வன்முறை மற்றும் மிரட்டல் கலாச்சாரத்தை விஸ்தரிப்பதற்கு அனுமதிக்கக் கூடாது. தமிழர்கள் அப்படியான வன்முறையிலிருந்து தப்பிக்கவே மேற்கிற்கு வந்தார்கள்.

கடந்த காலங்களில் மேற்கு நாடுகளின் அதிகாரிகள் தமிழர்களின் உரிமைகளைப்பற்றி அதிகம் சிரத்தை காட்டாது அது ஒரு சமூகத்திற்குள் ஏற்படும் பிரச்சனைகளாகக் கருதினார்கள். எனினும் செப்டம்பர் மாதம் 26ம் திகதி புலி இயக்கத்தினர் மீது பிரயாணத்தடை விதித்து ஐரோப்பிய யூனியன் வெளியிட்ட அறிக்கையில் புலிகளினதும் அவர்களுடன் தொடர்புடைய மற்றைய அமைப்புக்களினதும் தனிப்பட்ட ஆதரவாளர்களினதும் பண சேகரிப்பு மற்றும் பிரசாரம் சம்பந்தமான சட்ட விரோத மற்றும் விரும்பத்தகாத நடவடிக்கைகள் சம்பந்தமாக அங்கத்துவ நாடுகள் மேலும் நடவடிக்கைகள் எடுப்பதில் ஒருமைப்பாடு கண்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் ஜனநாயகத்தையும் பன்முகத்தன்மையையும் முன்னெடுக்கும் திரு.லோகநாதன் போன்ற அவர்களது சொந்த பிரஜைகள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கைகளே ஐரோப்பிய அரசாங்கங்கள் மனித உரிமை ஜனநாயகம் சம்பந்தமாக எவ்வளவு பொறுப்புடன் நடந்து கொள்ளுகிறார்கள் என்பதைக்காட்டும் புலி இயக்கத்தினர் அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் ஐரோப்பிய மண்ணிலேயே உதாசீனம் செய்வதை ஐரோப்பிய யூனியன் நிறுத்த முடியாவிட்டால், இவர்கள் இலங்கையில் மனித உரிமையும் ஜனநாயகத்துடனும் கூடிய ஒரு சமாதானத்தை உருவாக்குவதில் உதவ முடியாது.

இலங்கை ஜனநாயக அரங்கம். (Sri Lanka Democratic Forum)

நன்றி - தேனீ

# சர்வதேச பயங்கரவாதத்துக்கு ஆதரவு, தமிழ் ஜனநாயக சக்திகளை அழித்தொழித்தல், கொலைவெறியின் வாசனை, பிரபாகரனின் பிறந்ததின உரையில்



பிரபாகரன் தனது பிறந்ததின உரையில் சர்வதேச நாடுகள் தம்மை பயங்கரவாத இயக்கமாக தடை செய்திருப்பது பற்றி மனம் வெதும்பியிருந்தார். விடுதலை இயக்கங்களை பயங்கரவாத இயக்கங்களாக சித்தரிப்பது பற்றியும் அரச பயங்கரவாதத்தை பொருட்படுத்தாமல் விடுதலை இயக்கங்களை பயங்கரவாத இயக்கமாக சித்தரிப்பதாகவும் பிரஸ்தாபித்திருந்தார். அவர் விடுதலை இயக்கம் என்று கூறுவது தம்மையும், தம்மையொத்த அல்ஹைறதா, லஸ்கர் ஐ தொய்பா போன்றவற்றையே என்பது சொல்லாமலே விளங்கும்.

படுகொலைகள் புரிவதையும், மாற்றுச் சமூகங்கள் மீது பயங்கரவாத அச்சுறுத்தல் புரிவதையும், சிறுவர் சிறுமியரை படையணிகளுக்குச் சேர்ப்பதையும், சக அரசியல் சக்திகளை அழித்தொழிப்பதையும், ஒரு கொலை சர்வாதிகார ராஜ்யத்தை நிறுவுவதையும்தான் இங்கு விடுதலை போராட்டம என்று குறிப்பிடுகிறார். நாகரிகமான நவீன உலக மானிடம் அவரின் பழக்கதோஷமான இந்த பயங்கரவாதத்தை, காட்டுமிராண்டித்தனத்தை சகித்துக் கொள்ளாததையிட்டு அவர் மிகுந்த விரக்தியும் வேதனையும் அடைந்துள்ளார். ஏனெனில் இன்று அவர் அனுபவிக்கும் அதிகார சுகபோகம் சாதாரண மக்களின் இரத்தததிலும், கண்ணீரிலும் கட்டப்பட்டவை.

அவர் இங்கு ஒட்டுப்படைகள் என்று மாற்றுக் கருத்துக்கொண்ட அமைப்புக்களை பற்றி, ஜனநாயக அமைப்புக்கள் பற்றி திரும்பத்திரும்ப குறிப்பிடுவதன் மூலம் மாற்று ஜனநாயக அமைப்புக்கள் மீது பெரும் எடுப்பிலான படுகொலை தாக்குதல்களை நடத்துவதற்கான சூசகமான அறிவிப்பை விடுத்துள்ளார். இந்த ஒட்டுப்படைகள் தமது அமைப்பினர், ஆதரவாளர்களை கோழைத்தனமாக கொன்றொழிப்பதாகவும். பாசாங்கு செய்திருந்தார்.

உண்மையில் இந்த யுத்தநிறுத்தக காலத்தில் புலிகள் ஈவிரக்கமற்ற படுகொலைகள் புரிந்ததை சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு, சர்வதேச நாடுகள் திரும்பத்திரும்ப பிரஸ்தாபித்திருந்தன, கண்டித்திருந்தன. உண்மையில் கோழைத்தனமான படுகொலைகளை பெரும் எடுப்பில் பாரியளவில் புரிந்ததை உலகம் அறியும்.

சிறுவர், சிறுமியரை யுத்தத் தேவைகளுக்காக பாடசாலைகளிலும், தெருக்களிலும், வீடுகளிலும், இழுத்துச் சென்றதை யுனிசெவ், ஐ.நா சபை, ஆகியன பதிவு செய்துள்ளன. திரும்பத்திரும்ப கண்டித்துள்ளன. கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை. புலிகளுக்குள்ளே ஏற்பட்ட பிளவு பெரும் மோதலாக வெடித்தது சமகால வரலாறு. வாகரையில் அந்த மோதலின் ஆரம்பத்தில் பிரபா அணி புலிகள் நூற்றுக்கணக்கான சிறுவர் சிறுமியரை கொன்றொழித்தது துப்பாக்கியின் நிழலில் மூடி மறைக்கப்பட்டது சமகால வரலாறு. மாற்று அமைப்புக்களை ஒட்டு படையினரென தூஷண வார்த்தைகளில் விளிக்கும் பிரபாகரன் அவர்கள் ஆயுதங்கள் வைத்திருப்பதாகவும், அவை களையப்படவில்லை என தொடர்ந்து எதிர்காலத்தில் நிகழ்த்தப்போகும் படுகொலைகளுக்கான நியாயத்தை கற்பிக்கும் வங்குரோத்தான பூச்சாண்டியை காட்டுகின்றார்.

பெரும் பீரங்கிப் படைகளையும், கடல் படையையும், ஆகாய விமானங்களையும், வைத்திருப்பதாக தாம் ஒரு அரசாக பரிணமித்துவிட்டதாக ஆலாவரணம் பண்ணும் பிரபாகரன் விரல்விட்டு எண்ணக்கூடிய துணிவும், திடசங்கற்பமும், தார்மீக ஆவேசமும் கொண்ட மாற்றுக் கருத்துக் கொண்டோரையிட்டு பெரும் பீதி கொண்டுள்ளார். உண்மையான கோழை அவர் தான் என்பதை தனது பிறந்தநாள் உரையில் பிரகடனம் செய்திருக்கிறார்.

கடந்த வருடம் தாம் போராட்டத்துக்கு ஆயத்தமாக இருந்தபோது சுனாமி ஊழி கூத்தாடி எம் மக்களை அள்ளிச் சென்று விட்டதையும், பல லட்சம் மக்கள் அகதிகளானதையும், தனது பிறந்தநாள் உரையில் பிரஸ்தாபித்திருந்தார். கேவலம், வெட்கக்கேடு தான் எந்த மக்களுக்கு தலைவன் என்று தன்னைத்தானே பிரகடனம் செய்கிறாரோ அந்த மக்கள் மனித குல வரலாறு கண்டிராத அனர்த்தத்தை சந்தித்த போது அவர் உடனடியாகச் சென்று அந்த மக்களுக்கு ஆறுதல் கூறியதாக எந்தச் சான்றும் இல்லை. உலகத்தின் உண்மையான நாகரிகமான எந்த விடுதலை இயக்கத்தின் தலைவனும் இவ்வாறு நடந்து கொண்டதில்லை.

தவிர சிங்கள தேசம் தமது தலைவரை தெரிவு செய்து விட்டதாகவும், இலங்கையில் சமூகங்கள் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர்தான் பிளவுபட்டது போலவும் அவரின் அரசியல் மதியுரை அமைந்திருந்தது.

தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமையை வாள்வீச்சு, துப்பாக்கி, வெடிகுண்டுகள் மூலம் பறித்துவிட்டு முஸ்லீம் சமூகத்தினரையும், வடக்கு கிழக்கில் அச்சுறுத்திவிட்டு சிறுபான்மை தேசிய இனங்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை, அவர்கள் தன்னியல்பாக தேர்தலை புறக்கணித்தது போல் பாவ்லா விடுகிறார். இங்கு வந்து தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த சர்வதேச நாடுகளுக்குத் தெரியும் என்ன நடந்தது என்று. மொத்தத்தில உலகத்தை பகுத்தறிவுள்ள மானிடத்தை முட்டாள்களாக கருதிக்கொண்டே இந்த விடுகையை, இதையும் இது போன்ற புரளிகளை கிளப்புகிறார்.

பௌத்த சிங்கள இனவாதம் பற்றி அரைத்த மாவை அரைத்தது போல், கூறியது கூறல போல் சுத்தி, சுத்தி பேசிவிட்டு சகட்டுமேனிக்கு ரணிலுடன் நடத்திய வியாபாரம் முறிந்து போனது பற்றி ஆதங்கப்பட்டு (தொலை தொடர்பு சாதனங்களை ரணில் அரசினூடாக பெற்றுக் கொண்டமை, ஆயுத தளபாடங்களை கடத்தியமை, கேள்விக்கிட மற்று படுகொலைகள் புரிந்தமை, சிறுவர், சிறுமியரை தங்கள் படையணிக்காக இழுத்துச் சென்றமை, மா∴பியா பாணி வியாபாரத்தை உச்ச நிலையில் வைத்திருந்தமை எங்கும் கப்பம், எதிலும் கபம் என்று மாபெரும் சமூகச் சூறையாடலை நடத்தியமை) பேசியதோடு இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பௌத்த சிங்கள இனவாதியென திட்டித் தீர்த்துவிட்டு என்றாலும் அவர் நடைமுறைவாதி எனக்கருதப்படுவதால் அவருக்கு தாங்கள் அவகாசம் வழங்குவதாக முத்தாப்பு வைத்திருக்கிறார்.

கடந்த வருடம் தனது பிறந்ததின உரையில் பொறுமையின் எல்லைக் கோட்டை அடைந்து விட்டதாக பாசாங்குத்தனமான விரக்தியுடன் பேசியவர் தற்போது அவகாசம் என்ற பரோபகாரம செய்கிறாராம்.

இந்த அவகாசம் என்பது பிரபாகரனின் சிந்தனையில் மாற்றுக் கருத்துக் கொண்டோரை துடைத்தழிக்கும் பாசிச சதியின் அங்கமான அவகாசமே.

எனவே சர்வதேச சமூகமும், இலங்கை அரசும் பெரும் எடுப்பில் நிகழப் போகும் படுகொலைகளை தடுத்து நிறுத்துவதற்கு உரிய உடன் நடவடிக்கையில் இறங்க வேண்டும். மாற்றுக் கருத்துக் கொண்டோரை, மனித உரிமையை, சிறுவர் சிறுமியரின் உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.பி.ஆர்.எல்.எவ் - பத்மநாபா

## கட்சியின் அடிப்படை நிலைப்பாடுகள்

வெளியீடு:- 28 இன்- தொடர்ச்சி

6. இலங்கை அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையேயுள்ள உறவை ஒரு ஏகாதிபத்தியத்துக்கும் அதன் காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்ட ஒரு நாட்டுக்கும் இடையேயுள்ள உறவு என வரையறுக்க முற்படுவது மிகவும் தவறானதாகும் என்பதை அரசியல் விஞ்ஞான மற்றும் வரலாற்று அறிவு கொண்ட அனைவரும் ஏற்பர். இலங்கையில் நிலவுவது இனங்களுக்கிடையேயான முரண்பாடே. பெரும்பான்மையான சிங்கள மக்களின் பிரதிநிதிகள் அரச அமைப்புக்களில் தமிழர்களுக்கு உரிய பங்கை வழங்காமல் முழுமையையும் தமக்கு மட்டுமே உரியதாக்க முனைவதுதான் இங்குள்ள இனமுரண்பாட்டின் அடித்தளம். இந்த அடித்தளம் குறித்துதான் தமிழர்களின் போராட்டம் நடைபெற வேண்டும். இலங்கையின் அனைத்து பாகங்களும் அனைத்து மக்களும் ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் சுரண்டல்களுக்கும் அடக்கு முறைகளுக்கும் நான்கு நூற்றாண்டுகளுக்கு மேல் உள்ளாக நேரிட்டது. கடைசியாக ஆண்ட பிரித்தானியர்கள் விட்டுச் சென்ற போது அவர்கள் வழங்கி விட்டுப்போன ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறையே இன்றைய சிக்கல்கள் அனைத்துக்கும் அடிப்படையாகும். எமது அண்மை நாடான இந்தியாவில் சமஷ்டி ஆட்சி முறையை 1930களிலேயே ஏற்படுத்திய பிரித்தானிய ஆட்சியாளர்கள் அதே சமகாலத்தில் இலங்கையிலும் அவ்வாறானதொரு முறையை ஏற்படுத்தியிருந்தால் இலங்கையில் இன்று நிலவும் அரசியற் சிக்கல்கள் ஏற்பட்டிருக்க மாட்டா. இந்தியாவிலும் திராவிட நாடு கோரிக்கை உட்பட எத்தனையோ விதமான பிரிவினைக் கோரிக்கைகள் இருந்தன. இந்தியா சுதந்திரம் பெற்ற போது 500க்கும் மேற்பட்ட சமஸ்தானங்கள் தனித்தனி சுதந்திர நாடுகளாக ஆகும் நோக்கங்களோடு இருந்தன. இன்று இந்தியா அவற்றையெல்லாம் கடந்து உலக அரசியல் பொருளாதாரத்தில் வலுவான ஒரு நாடாக அமைவதற்கு அதன் கூட்டாட்சி (சமஷ்டி) அமைப்பே அடிப்படைக்காரணம் என்பதை அனைவரும் புரிந்து கொள்ளுதல் அவசியமாகும். ஐரோப்பியர்கள் இந்திய உபகண்டத்தைக் கைப்பற்றிய போது எப்படியிருந்ததோ அப்படியேயிருப்பதுதான் அரசியல் நியாயம் எனில் இன்று இந்தியா குறைந்த பட்சம் 600 சுதந்திர நாடுகளாக இருத்தல் வேண்டும். சாத்தியமான ஓர் அரசியற் தீர்வு பற்றி அறிந்து கொள்வதற்காக சுவிற்சர்லாந்துக்கும், ஜேர்மனிக்கும், கனடாவுக்கும், தென்னாபிரிக்காவுக்கும் பறந்து திரிவோர் இந்தியாவைப்பற்றி நன்கு தெரிந்து கொண்டாலே போதிய அளவு அறிவைப் பெற்றுக்கொள்ளலாம்.

7. சிங்கள, தமிழ், முஸ்லிம், மற்றும் மலையக மக்கள் மத்தியில் உள்ள ஜனநாயக முற்போக்கு சக்திகள் அனைவரும் இந்தத் தவறுகளிலிருந்து இலங்கையின் அரசமைப்பின் ஏற்பாடுகளைத் திருத்தி அமைப்பதை நோக்கமாகக் கொண்டு போராட வேண்டும், இலங்கை இந்த நான்கு தேசிய இனத்தவருக்கும் சொந்தமானது, இலங்கைக்குள் இனங்கள் தொடர்பாகவோ அல்லது பொருளாதார முரண்பாடுகள் மற்றும் ஏற்றத்தாழ்வுகள் தொடர்பாகவோ அல்லது சமூகங்களில் நிலவும் சாதிவேறுபாடுகள் மற்றும் அநாகரீகங்கள் தொடர்பாகவோ நாம் அனைவரும் இலங்கையர் என்ற அடிப்படையில் போராடவும், மாற்றங்களை ஏற்படுத்தவும் உரிமைகளையுடையவர்கள் என்பதை நிலைநிறுத்த வேண்டியுள்ளது. ஒரு பக்கம் சிங்கள பௌத்த பேரினவாதிகளும் புலிப் பாசிச பயங்கரவாதிகளும் ஒருவரோடொருவர் யுத்தம் செய்தது போல் காட்டிக் கொண்டு இலங்கையின் ஐக்கியத்துக்கும் இலங்கை மக்களின் சகோதரத்துவ வாழ்வுக்கும், இலங்கையின் ஜனநாயகரீதியான அரசியல் பொருளாதார அபிவிருத்திக்கும் தடையாக உள்ளனர். இவர்களுக்கு எதிராக எந்தவித சந்தேகங்களுக்கும் இடமின்றி, தளம்பல்கள் தயக்களின்றி இலங்கையின் அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளும் ஒன்றிணைந்து இலங்கையின் அனைத்து மக்கள் மத்தியிலும் ஒரு பேரியக்கத்தை நடாத்தல் வேண்டும். மக்கள் மத்தியில் இலங்கையின் ஐக்கியமும் சுதந்திரமும் நிலை பெற மாநிலங்களின் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டியதன் அவசியத்தை உணரும்படி பரப்ப வேண்டும். பிரிவினைக் கோரிக்கைகளும் பேரினவாத செயற்பாடுகளும் எவ்வளவு ஆபத்தானவை என்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டும். அதிகாரப் பரவலாக்கல் கோரிக்கைகளுக்கும் பிரிவினைக் கோரிக்கைக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளையும், அதிகாரப் பகிர்வுக்கான கோரிக்கைகளை பிரிவினைக கோரிக்கையென அர்த்தப்படுத்துவதில் உள்ள ஆபத்துக்களையும், அதேபோல அதிகாரப் பகிர்வு விடயத்தில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் உடன்பாடுகள் ஏற்படாமையைக் காரணம்காட்டி பிரிவினைக்கு ஆதரவளிப்பதனால் விளையும் ஆபத்துக்களையும் அனைத்து பகுதி மக்களும் தெளிவாக உணரும் வகை செய்தல் வேண்டும்.

8. நாமும் இலங்கையர், எமது இனத்துக்கும் சிங்கள இனத்தவருக்கு உரிய சமஉரிமை உண்டு அதனை அரசியல் பொருளாதார அரங்கில் நிலைநாட்ட வேண்டும் என்ற அடிப்படையிலேயே தமிழர்களின் போராட்டம் ஆரம்பித்தது தொடர்ந்தது. ஆனால் போராட்டத்தின் போக்கில் திருப்பங்களும் மாற்றங்களும் அத்துடன் சிங்கள ஆட்சியாளர்களின் தொடர்ச்சியான இனவாத செயற்பாடுகளுமே தமிழர்களின் மனங்களில் நாம் இலங்கையர் என்ற தேசப்பற்றை வளர்ப்பதற்கு மாறாக தமிழர்கள் என்ற இனப்பற்றை மட்டுமே சுற்றி தமிழர்களின் அரசியல் சமூகச் செயற்பாடுகள் அமைந்து வந்தன. பிறப்புச் சான்றிதழ்களுக்காகவும், தேசக்கடவுப் பத்திரத்துக்காகவும் (பாஸ் போட்டுக்காகவும்) இலங்கையர் என்று பதிந்து கொண்டாலும் அது தமிழர்கள் பெரும்பாலானோரின் மனப்பதிவாக அமையவில்லை. இலங்கையர் என்றால் அது சிங்களவர்களைக் குறிப்பது போன்ற உணர்வையே தமிழர்கள் கொள்ள நேரிட்டது. இதன் மூலம் தமிழர்கள் தமது தேச அடையாளங்களையே மறக்க நேரிட்டது. தமது தேசத்தின் மீதான தமது தார்மீக உரிமைகளையும் கடமைகளையும் மறக்கும் நிலையேற்பட்டது. இவையனைத்தும் இலங்கையைச் சிங்கள நாடாக்கி விட வேண்டும் என்ற உள் நோக்கோடு அரச அமைப்புக்களின் உள்ளும் புறமும் இருந்து செயற்பட்டு வரும் சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கு வசதியாகவே அமைந்தன இன்றும் அமைகின்றன.

# இலங்கையில் படுகொலைகளை நிறுத்துமாறு கோரி பெல்ஜியம்-பிரசெல்சில் ஜனநாயகவாதிகள் ஆர்ப்பாட்டம்!!

தமிழ் ஜனநாயக அரசியல் கட்சிகள், ஊடகவியலாளர்கள் கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் ஜனநாயக எண்ணம் கொண்ட பர்ஜைகள், சிங்கள முஸ்லீம் மனித உரிமை வாதிகள் பெல்ஜியம் தலைநகர் புருசெல்சில் நடைபெற்ற ஆர்பாட்டத்தில் பெருந்திரளில் கலந்துகொண்டனர். தமிழர் அமைப்புக்களின் இணைப்பகமே இந்த ஆர்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

புலிகளால் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகளின் படங்கள் தாங்கிய பதாகைகளை ஆர்பாட்டக்காரர்கள் தாங்கி வந்தனர். அத்தோடு இலங்கையில் புலிகளின் படுகொலைளை முடிவுக்கு கொண்டுவருவதற்கும், சிறுவர் சிறுமியரை யுத்தத்திற்கு அணிதிரட்டுவதற்கும, கப்பம், அடாவடி அச்சுறுத்தல், அராஜக வன்முறைகளுக்கு எதிரான கோசங்கள் பெல்ஜியம் தலைநகர் புருசெல்ஸ் வீதிகளில்- ஐரோப்பிய யூனியனின் தலைமையகத்திற்கு முன்னால் எழுப்பப்பட்டன.

இலங்கையில் புலிகளின் ஜனநாயக விரோத, மனித உரிமை மீறல்களை நிறுத்துவதற்கு ஐரோப்பிய யூனியன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி கடும்குளிரின் மத்தியில் நிகழ்ந்தது. தமிழ்மக்கள் மத்தியில் எழுந்துவரும் ஜனநாயக விழிப்புணர்ச்சியின் அம்சமாகவே இதனை கருதமுடியும். ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, டென்மார்க், சுவிட்சர்லாந்து, கனடா மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் இருந்து பெருந்திரளானோர் இந்த ஜனநாயகத்திற்கான ஆர்பாட்ட பேரணியில் அணிதிரண்டனர்.

ஐரோப்பிய யூனியன் புலிகளின் ஏக பிரதிநிதித்துவ கோரிக்கையை நிராகரிக்க வேண்டும்! தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு கட்சிகளும் சமாதான பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதற்கான நியாயப்பாட்டை ஏற்றுக்கொள்ளவேண்டும்!

ஏகபிரதிநிதித்துவ- கற்பிதத்தின் பேரில் புலிகள் தமிழர்கள் மீதும் முஸலீம்கள் மீதும் சிங்களவர்கள் மீதும் மேற்கொள்ளும் வன்முறை, பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வர ஐரோப்பியயூனியன் தனது செல்வாக்கைப் பிரயோகிக்க வேண்டும்!

இலங்கையின் வடக்கிலிருந்து 15 வருடங்களுக்கு முன்னர் வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மககள் தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கும்- அவர்கள் பல தசாப்தங்களாக நிலவும் இனப்பிரச்சனை தீர்வுக்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தனிதரப்பாக பங்கு பற்றுவதற்கான உரிமையை அங்கீகரிக்கவேண்டும்!

மனித உரிமை, ஜனநாயகம், மக்களின் பாதுகாப்பு ஆகிய விடயங்களை பிரதானமாக உள்ளடக்கி பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்க இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் ஐரோப்பிய சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும்!



தமிழ் முஸ்லீம் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நிரந்தர தீர்வை நோக்கி செயற்படுவதற்கு இலங்கை அரசின்மீது அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும்!

ஐரோப்பாவில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கை அகதிகளை இலங்கையில நிரந்தரசமாதானமும், மனித உரிமை ஜனநாயகமும் உறுதிப்படுத்தபடும் வரை திருப்பி அனுப்பக்கூடாது!

ஐரோப்பாவில் வாழும் தமிழர்கள் சுதந்திரமாகவும் அச்சுறுத்தல் இன்றியும், பீதியின்றியும் வாழ்வதற்கான பாதுகாப்பை ஐரோப்பிய யூனியன் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்! புலிகளின் நிதிசேகரிப்பு- கப்பவசூல்- மிரட்டல்- தாக்குதல் போன்ற இன்னல்களை ஐரோப்பா வாழ் தமிழர்கள் அன்றாடம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஐரோப்பிய நாகரிகமான வாழ்க்கை முறைக்கெதிரான இத்தகைய செயற்பாடுகளை ஐரோப்பிய சமூகம் அனுமதிக்கக் கூடாது!

சமூகம் என்ற வகையில் சுதந்திரமான தமிழ் அமைப்புக்களும், தனி மனிதர்களும் பாரிய அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி நிற்கின்றனர். தமது நம்பிக்கைகளையும் கருத்துக்களையும் வெளியிடும் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்!

ஐரோப்பாவில் புலிகளின் கட்டுபாட்டில் உள்ள ஊடகங்களை ஐரோப்பியயூனியன் கண்காணிக்க வேண்டும்! பல புலிகளின் ஊடகங்கள் மனித கண்ணியத்தையும், நாகரிகத்தையும், ஒழுக்க விழுமியஙகளையும், பத்திரிகா தர்மத்தையும் மீறிச்செயற்படுகின்றன.

புலிகளின் பயங்கரவாத கிடுகிப்பிடியில் பீதியின் நிழலில் வாழும் தமிழர்களின் ஆன்ம உணர்வையே இங்கு நாம் வெளிப்படுத்துகிறோம். நாங்கள் பயங்கரவாத அச்சுறுத்தலின் மத்தியிலும்- உயிராபத்திற்கு மத்தியிலும் இந்த கோரிக்கைகளை உறுதியாக ஐரோப்பிய சமூகத்தின் முன்னால் முன்வைக்கிறோம்.

ஐரோப்பிய சமூகம் தமிழர்கள் மத்தியில் ஜனநாயக இடைவெளியை உருவாக்குவதில் உறுதியான திட்டவட்டமான பங்களிப்பை வழங்க வேணடும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

பல்வேறு ஜனநாயக அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இந்த ஆர்பாட்ட பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இந்த ஜீவாதாரமான கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஐரோப்பிய யூனியன தலைமையகத்தில் கையளிக்கப்பட்டது.

# மட்டு-அம்பாறை மாவட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ்-பத்மநாபா இரா. துரைரட்ணம் தலைமையிலும், யாழ் மாவட்டத்தில் புளொட் தலைமையிலும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

உள்ளுராட்சி சபைத் தேர்தலில போட்டியிட யாழ் மாவட்டத் தேர்தல் தொகுதியில் நான்கு அரசியல் கட்சிகள் சார்பாக வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

புளொட்- ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா), இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஈ.பி.டி.பி ஆகிய அரசியற் கட்சிகள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன. ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு யாழ் மாவட்டத்தில் உள்ள வல்வெட்டித்துறை, சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய மூன்று நகர சபைகளுக்கும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருந்தது. ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு போட்டியிடுவதற்க்கு வேட்புமனுத் தாக்கல் செய்த :மூன்று நகரசபைகளிலும் ஈ.பி.டி.பி போட்டியிடவில்லை.

இத்தேர்தலில் இணைந்து போட்டியிடும் புளொட்- ஈபிஆர்எல்எவ் (பத்மநாபா) இருகட்சிகளதும் வேட்பாளர்கள் சார்பில் புளொட் அமைப்பைச் சேர்ந்த சிவகுமாரன் (பவுண்) வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தார்.

படுகொலைகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் வடக்கு கிழக்கில் செயற்படும். ஜனநாயகத்தை மதிக்கும் தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஐக்கியத்தை உருவாக்குவதும், வடக்கு கிழக்கில் ஜனநாயக சூழலை தோற்றுவிப்பதும், இன்றைய பிரதான தேவை என்பது எமது கட்சியின் முடிவாகும். இதற்கிணங்கவே உள்ளுராட்சி தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ் - பத்மநாபா வடக்கு கிழக்கில் புளொட் அமைப்பினருடன் இணைந்து வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளதாக கட்சியின் மூத்த உறுப்பினரும், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பொறுப்பாளரும், தலைமைக்குழு சார்பில் இரா. துரைரட்ணம் தெரிவிததுள்ளார்.

தி. சிறிதரன் 141ஏ, மன்னார் வீதி, குருமன்காடு, வவுனியா. அவர்களால் இரத்தினப்பிட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org